மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 26 ★ 27-10-57 சென்னை ★ விலை 16 காசு

இந்தி பேசுவோர் எவ்வளவு பேர்?

—(0)—

ஆளவந்தார்களுக்கே தெரியாது!

—(0)—

பெரும்பான்மை என்பதற்கு ஆதாரமில்லை.

—(0)—

இந்தியாவின் அரசாங்க மொழியாக இந்தியை ஆக்கிவிடப் பலமான முயற்சிகள் நடைபெறுகின்றன! பலமான முயற்சிகள் என்றால், பலத்தை நம்பி செய்யப்படும் முயற்சிகள்—ஆட்சி பலத்தை நம்பி, அதிகார பலத்தை நம்பி, அரசியல் சட்ட பலத்தை நம்பி, பணபலத்தை நம்பி, ஒரு பகுதியில் கிடைக்கக் கூடிய அதிகமான எண்ணிக்கை பலத்தை நம்பி, இந்தியைக் கட்டாயப் படுத்த முயற்சிகள் செய்யப் படுகின்றன, திட்டங்கள் தீட்டப் படுகின்றன!

இந்திய துணைக்கண்டம் முழுவதையும் இந்தி மயமாக்கவேண்டும் என்ற பெரியதொரு ஆசையில்—அதாவது பேராசையில்—வடக்கிலுள்ளவர்கள் மிகத் தீவிரமாக வேலை செய்கிறார்கள்! அதற்காகக் கச்சை கட்டிக்கொண்டு, பாராளுமன்றத்தில் கட்டுப் பாடான பலத்தைப் பெற்றுள்ள ஆளுங்கட்சியினரும் இந்தி ஆதரவாளர்களும் பாடுபடுகின்றனர்! இந்தி ஆதரவாளர்கள் இந்தியிடம் காட்டுகிற பிரியம், அந்தப் பிரியம் என்ற எல்லையைக் கடந்து வெறித்தன்மையாக்கும் நிலைக்கு—அடங்காதவர்களை அடக்க நினைக்கும் வெறித்தன்மைக்குச் சென்றுள்ளது! இந்திய துணைக்கண்டம் முழுவதையும் ஒரே மொழியின் கீழ், ஒரே ஆட்சியின்கீழ் கொண்டு வர நினைக்கும் ஏகாதிபத்திய வெறியுடன் அவர்கள் இருக்கிறார்கள்!

வட நாட்டிலுள்ள சிலருக்கு "இந்தி மொழி அரசாங்க மொழியாக வேண்டும்" என்பது முடிவு செய்யப்பட்ட பிரச்சினையாகத் தோன்றுகிறது. அதை முடிந்த முடிவாக, ஏதோ அசைக்க முடியாத ஒரு தீர்மானமாக அவர்கள் கருதுகிறார்கள்! "அரசாங்க மொழியாக இந்தி எப்பொழுது வரவேண்டும் என்பதில் காலக் கெடு தருவதற்கு அவர்கள் யோசிக்கிறார்களே தவிர, அரசாங்க மொழி இந்திதான்" என்பதில் அவர்களுக்குச் சிறு தடுமாற்றமும் கிடையாது. இந்தி பேசுபவர்களுக்கு அது மிக எளிதான முடிவாக இருக்கலாம். ஆனால் இந்தியல்லாத மற்ற மொழியினர்க்கு குறிப்பாக இந்தியுடன் எந்தவகையிலும் சிறிதும் தொடர்பற்ற தென்னாட்டுத் திராவிடக் குழு மொழியினர்க்கு அது மிகக் கடுமையான பிரச்சினையாக இருக்கிறது. "எப்பொழுது வர வேண்டும்?" என்பதற்கு வாய்தா கேட்பது அல்ல, ஆரம்ப அடிப்படைப் பிரச்சினையே நமக்குத் தீரவில்லை. இந்திதான அரசாங்க மொழியாக வேண்டும் என்ற அடிபபடையையே நாம் ஒப்புக் கொள்ளவில்லை. அரசாங்க மொழியாக எந்த மொழி இருக்கவேண்டும் என்பது இந்தி மொழிக்காரர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு மாநிலத்தவர்களும் முக்கியமான ஒவ்வொரு மொழிக் குழுவினரும், தம்மைத் தாம் தனியாகப் பொறுத்தவரைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டியதாகும்.

இந்தியாவின் அரசாங்க மொழியாக இந்தி ஏன் வரவேண்டும்? அரசாங்க மொழியாவதற்குரிய பண்பாடுகள் அந்த இந்திமொழியிடம் இருக்கிறதா? இந்தி அரசாங்கமொழியாவதால் இப்பொழுதில்லாத புது பலன்கள் என்னென்ன கிடைக்கும்? இவை போன்ற பல கேள்விகளுக்கு திருப்திகரமான பதில்கள் கிடைத்தால்தான், அரசாங்க மொழிபற்றி ஒரு முடிவு எடுக்க நம்மால் முடியும். அதை விட்டு அவசரக்கோலத்தில், அதிகார பலத்தைக் காட்டி,

இரா. செழியன்

அள்ளித் தெளிக்கும் மனப்பான்மையுடன் டில்லி ஆட்சிபீடம் நடந்துகொண்டால், இந்திய துணைக்கண்டம் இரண்டு மூன்றாக மட்டுமல்ல, பத்துப் பதினைந்து கூறுகளாகப் பிரிந்துவிடும் சூழ்நிலை உண்டாகும்!

இந்தி அரசாங்க மொழியாக வேண்டும் என்பதற்கு இந்திப் பிரியர்களும் இந்தி வெறியர்களும் காட்டுகின்ற முதற்காரணம் என்னவென்றால், இந்தியாவின் மக்கள் தொகையில் இந்தி பேசுபவர்கள் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள் என்பதாகும்! இந்தி பேசுவோர் தொகை அதிகம் என்பதுதான் முதற் காரணமாக மட்டுமல்ல, முடிந்த கடைசிக் காரணமாகவும் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

"ஆரம்ப காலத்தில் தேசிய மொழியாக இந்தி வரவேண்டும்!" என்று கூறினார்கள். "ஏன் என்று கேட்டால், "இந்தி தெரிந்தவர்கள் தொகை அதிகம்" என்று கூறினார்கள்!

பின்பு "பொதுமொழியாக இந்தி ஆகவேண்டும்!" என்று சொன்னார்கள், அதற்குக் காரணம் கேட்டபொழுது "இந்தி தெரிந்தவர்கள் தொகை அதிகம்!" என்று சொன்னார்கள்!

"இந்தியைவிட ஆங்கிலம் எவ்வளவோ சிறந்த, பண்பட்ட, பழக்கப்பட்ட மொழியாக இருக்கிறதே!" என்று சொன்னால், "இருக்கலாம், இருந்தாலும் ஆங்கிலம் வெளிநாட்டு மொழி, இந்திதான் இந்தியாவுக்கேற்ற மொழி, இந்திதான் இந்தியாவில் அதிகமானவர்களுக்குத் தெரிந்த மொழி!" என்று கூறுகிறார்கள்!

"இந்தியாவிலுள்ள மொழிகளில்கூட இந்தியைவிடப் பண்பட்ட மொழிகள்—இலக்கிய இலக்கணச் செறிவுடைய மொழிகள்—பல இருக்கின்றனவே, அவற்றை ஒதுக்கி இலக்கியமற்ற இல்க்கணமற்ற, வளர்ச்சி யெதுவும் இல்லாத இந்தி மொழிக்கு ஏன் முதலிடம் தரவேண்டும்?" என்று கேட்டால், "இந்தியில் இலக்கிய இலக்கணச் செறிவு கிடையாது. சொல்வளமும் பொருள்வளமும் இல்லை என்பது உண்மையே! ஆனால் இந்தி தெரிந்தவர்கள் அதிகமான பேர்கள் இருக்கிறார்கள், எனவே இந்திதான் அரசாங்க மொழியாக வேண்டும்" என்று கூறுவார்கள்.

இவ்வாறு எந்த வகையில் கேட்டாலும், எந்தப் பிரச்சினை வந்தாலும் சுற்றி வளைத்துக் கடைசியாக "இந்தியாவில் இந்திமொழி தெரிந்தவர்கள் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள்" என்றுதான் முடிப்பார்கள்!

இந்தியாவில் இந்திமொழி தெரிந்தவர்கள் பெரும்பான்மையினராக இருக்கிறார்களா?

இந்த ஆரம்பக் கேள்வியையே நாம் கேட்டாகவேண்டும். "இந்திமொழி பேசுபவர்கள் பெரும்பான்மையினர்!" என்று அடிக்கடி கூறப்பட்ட காரணத்தால், அதுதான் உண்மையான நிலை என்று பலர் நினைக்கிறார்கள். ஆதரிப்பவர்களில் பலரும், எதிர்ப்பவர்களில்கூடச் சிலரும் "இந்தி பேசுவோர் பெரும்பான்மையினர்" என்பதை ஒப்புக்கொண்ட நிலையில் தர்க்கம் வாதிடுகின்றனர். எவ்வாறோ, இந்தி துணைக் கண்டத்தில் இந்தி தெரிந்தோர் பெரும்பான்மையாக இருக்கிறார்கள் என்ற கருத்து வலுப் பெற்றுள்ளது. இது எந்த அளவு உண்மை என்பதை நாம் ஆராயவேண்டும்.

"இந்தியாவில் இந்தி பேசுபவர்கள் பெரும்பான்மையினர்!" என்று இந்தி

(11-ம் பக்கம் பார்க்க)

"இந்தித் திணிப்பை எதிர்த்தாகவேண்டும்"

——(0)——

"கேடுநாளை ஒத்திப்போடுவது கேடு பயப்பதாகும்"

——(0)——

ஆச்சாரியாரின் கருத்துரை!

——(0)——

[அரசாங்க மொழியாக இந்தி வருதல் கூடாது என்பது குறித்து திரு. சி இராசகோபாலாச்சாரியார் பலமாகப் பேசிவருகிறார். இந்தி கட்டாயப்படுத்தப்பட்டால், இந்தியல்லாத மற்ற மொழியினருக்கும் குறிப்பாகத் தென்னாட்டிலுள்ள திராவிட மொழிகளைப் பேசுவோருக்கும் பெருந்தீங்கு விளையுமென அவர் கருத்துரை தந்துள்ளார். 24-10-57 சென்னை ஒய். ஐ. எம். ஏ. சங்கச்சாரில் நடைபெற்ற கூட்டத்தில் டாக்டர் சுப்பராயன் தலைமையில் ஆச்சாரியார் அவர்கள் பேசிய ஆங்கில சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு கீழே தரப்படுகிறது.]

இந்த மொழிப் பிரச்சினையைப் பற்றி அநேக கூட்டங்களில் நான் ஏன் பேசுகிறேனென்றால், இந்தியாவின் அரசாங்க மொழியாக இந்தி திணிப்பதை நாம் எதிர்த்துப் போராடவேண்டிய முக்கியமான கட்டத்திலிருப்பதினால் தான்! வெறும் கருத்து வேற்றுமை மட்டும் என்றால் இந்திய அரசாங்கம் செய்வதை நாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்; அவர்கள் செய்வதில் சரியோ தவறோ இருந்தால் அதன்படி அவர்கள் விளக்கம் பெற்று முடிவு எடுக்கட்டும் என்று நாம் இருந்து விடலாம். ஆனால் இந்தப பிரச்சினை அப்படிப்பட்டதல்ல. நமது பகுதியில் இருக்கும் மக்களையெல்லாம் மிகவாகப் பாதிக்கும் பிரச்சினையாக இது இருக்கிறது. அதனால்தான் உங்கள் கவனத்தையெல்லாம் இந்தப் பிரச்சினையின் மீது திருப்ப நான் முயலுகிறேன், அது எனது கடமையென்றும் நினைக்கிறேன். இந்தப் பிரச்சினையை நீங்கள் அறிந்துகொண்டால் மட்டும் போதாது. இந்தி கட்டாயமாகத் திணிக்கப்பட்டால், அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்ற உறுதியான எண்ணத்தை நீங்கள் பெறவேண்டும். பிரச்சினைகளை விவாதித்து விட்டால் மட்டும் போதாது; ஆராய்ச்சியில் ஈடுபடுவது போல காரணகாரியங்களைபபற்றிப் பேசிக் கலைந்து விட்டால் போதாது; ஒரு கோழிச் சண்டையைப் பார்ப்பது போலவோ, ஒரு உதைப் பந்து விளையாட்டை வேடிக்கை பார்ப்பது போலவோ, இதில் நாம் இருந்துவிடக் கூடாது. இது விளையாட்டு அல்ல, வேடிக்கையுமல்ல. விளையாட்டில் உதைபடுகிற பந்தைபபோல நாம் உதைக்கப் படுகிறோம். ஆதலால் காலங் கடத்தாமல், உடனடியாக இதில் நம் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும்.

பிடிவாதத்தினாலேயோ, அலட்சியத்தினாலேயோ, எந்த முடிவையும் எடுக்கக்கூடாது. எதிலும்நாம்விழிப்புடன் இருக்கவேண்டும். நாம் செய்வதுசரி என்ற நிச்சயத்துடன் எதையும் செய்யவேண்டும். அந்த உறுதி இருந்தால்தான் நாம் நடக்கிற போராட்டத்தில் வெற்றிகாண முடியும். நாம் சரியான வழியில் இருக்கிறோம் என்ற நம்பிக்கையில் உறுதி இருந்தால்நமக்கிருக்கும்எல்லா சக்திகளையும்ஒருமுகபபடுத்திப் போராடமுடியும். துப்பாக்கி இன்றி, தோட்டா இன்றி நடத்துகின்ற போராட்டத்தில்நமது சக்திகளையெல்லாம் ஒன்றாகத் திரட்டினால்தான் வெற்றி காணமுடியும். நம்மைச் சாந்தப்படுத்த பலவிதமான உறுதிமொழிகள் தரபபட்டுள்ளன. இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று குடியரசுத்தலைவரும், பிரதம மந்திரியும் உறுதிமொழிகள் தந்துள்ளார்கள்.

தென்னிந்தியாவிலுள்ள மொழிகளை அப்புறப்படுத்தி அவைகளுக்குப்பதிலாக இந்தியை வைக்கவேண்டுமென அவர்கள் கூறாமலிருப்பது உண்மையே! அவர்கள் ஏன் அப்படிச் சொல்லாமலிருக்கிறார்கள் என்றால், அப்படிச் சொல்வது அதிகப்படியானது என்றுநினைக்கிறார்கள். அப்படி சொன்னால், அது வெற்றி பெறாது என்றும் நினைக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் நம்மை அடக்கியாண்ட பொழுது, நமமிடையே பல மொழிகளும் பல நம்பிக்கைகளும் இருந்த போதிலும் சுதந்திரமாகவாழும் உரிமைக்காகப் பாடுபட்டோம் அப்போது ஒன்றாக இருந்து போராடினோம் என்பதற்காக இப்பொழுது ஒரே மொழி போதும் ஒரே மொழிக்கு உட்பட்ட ஒரே ஆட்சி இருந்தால் போதும் என்று கூறுவதில் பயனில்லை. உண்மைக்கு மாறாகக் கறபனை செய்வதாலோ, பகற்கனவு காணுவதாலோ எதையும் செய்து முடிக்கமுடியாது. தனிப்பட்ட வாழ்விலும் பொதுவான முறையிலும், முன்னேற்றம் ஏற்படாது. 'இந்தியாவின் தேசிய மொழி இந்திதான்: அந்த அடிப்படையில் நாம் செயலாற்றுவோம்' என்று வற்புறுத்துவார்களேயானால், அது பலன் தராத பகறகனவாகவேமுடியும். உண்மைக்கு மாறான அடிப்படையை வைத்துத் தொடங்கினால் தவறான முடிவுகளில்தான் போய் நிற்கவேண்டியிருக்கும்.

தேசிய மொழி என்பது ஒரு நாட்டில் எல்லா இடங்களிலும் மக்களால் பேசப்படும் மொழியாக இருக்கவேண்டும். எல்லாப் பகுதியிலுமுள்ள மக்கள் அந்த மொழியைப் பேசாவிட்டால் அது திணிக்கப் பட்ட மொழியாகும். தேசிய மொழி என்று அழைக்கப்படும் காரணத்தாலேயே, ஒரு மொழியை தேசிய மொழியாக்கிவிட முடியாது.

நமக்கு உறுதிமொழிகள் பலவற்றைத் தருகிறார்கள். அவ்வாறு உறுதிமொழிகள் தருவதிலிருந்தே, பெரிய தீங்கையும், சங்கடங்களையும் உண்டாக்கும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது புலனாகும். ஏதாவது ஒரு சமாதானத்தைச் சொன்னால், நமது மக்கள் வெகு எளிதில் அதை நம்பிவிடுகிறார்கள். இந்தியைக் கட்டாயப்படுத்த மாட்டோம் என்று யாராவது ஒரு நல்லவர் சொல்லிவிட்டால், அதை உடனே நாம் நம்பி விடுகிறோம். ஆனால் நாம் வாங்குகிற தபால் கார்டைப் பார்த்தால், அதில் இந்தி அச்சிடப் பட்டிருக்கிறது. இந்தி வேறு முறைகளில் கட்டாயப்படுத்தப் படுகிறது. மணியார்டர் பாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உங்களில் பலருக்கு மணியார்டர் அனுப்பவேண்டிய சந்தர்ப்பம் இருந்திருக்காது; அனுப்புவதறகு பணம் இல்லாத காரணத்தால்! மணியார்டர்மூலம் பணத்தை வாங்கும் சந்தர்ப்பம் வேண்டுமானால் கிடைத்திருக்கும். அதில் சங்கடம் வந்திருக்காது. ஏனென்றால் எந்த இடத்தில் கையெழுத்துப் போடவேண்டும் என்பதற்கு பென்சிலால் கோடுபோட்டு, தபால்காரர் கொடுத்து விடுகிறார். இந்தியில் அச்சிடப்பட்டுள்ள மணியார்டர் பாரத்தை பூர்த்தி செய்வதென்பது, அதிலும் சிறு கிராமங்களில் இருப்பவர்களுக்கு மிகக் கடினமான செயலாகும்! தென்னிந்தியாவில் இந்தி பற்றி ஏதுமே அறியாதவர்களிடம் இந்தி மணியார்டர் பாரங்களைத் தருவது இந்தியைக் கட்டாயப்படுத்துவதாக இருக்கிறதேயன்றி வேறெப்படி இருக்கமுடியும்?

வட இந்தியாவிலிருந்து எனக்கு வருகிற கடிதங்களில், எனது பெயர், விலாசம் எல்லாம் இந்தியில் எழுதப்பட்டு வருகின்றன. அதை மொழிபெயர்த்து, யாருக்கு வந்திருக்கிற கடிதம் என்று கண்டுபிடித்துக் கொடுக்க நமது தபால்காரர்களுக்குச் சில நாட்களாகிறது. அந்தக் கடிதங்களை எழுதியவர்களுக்கு ஆங்கிலம் தெரியாதா என்றால், மிக நன்றாக எழுதத் தெரியும். இருந்தாலும் வேண்டுமென்று இந்தியில் எழுதிவைக்கிறார்கள். இந்தியைத் திணிப்பதில் இது ஒரு வகையான முயற்சி! இப்படிச் செய்வதால், இந்தி படித்துக்கொள்ள வேண்டியதின் அவசியத்தை நாம் உணர்ந்து கொள்வோம்என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

இதுமாதிரி சிறுசிறு காரியங்கள் பல செய்யப்படுகின்றன. இந்தியைத் திணிப்பது என்று அவர்கள் தீர்மானித்தவுடன், இது போன்று பல முயற்சிகளில் ஈடுபடுவார்கள். இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், வெறும் பேச்சில் தரப்படுகிற உறுதிமொழிகளை நம்பி, இந்தியை அவர்கள் திணிக்கமாட்டார்கள் என்று ஏமாந்து விடக்கூடாது. நாம் எப்பொழுதும் மிக எச்சரிக்கையுடனும், எதிர்ப்பைச் சமாளிக்கக்கூடிய பாதுகாப்புடனும் இருக்கவேண்டும்!

தபால்கார வேலைக்கு இங்கிருந்து ஒருவர் மனுச் செய்கிறார் என்றுவைத்துக்கொள்ளலாம். தபால்இலாகாமந்திரிஅவரைப் பார்த்து உனக்கு இந்தி தெரியுமா? என்று கேட்பார். தெரியாது!, என்று இவர் நிற்பார். அதற்கு அவர் புன்னகை செய்து உன்னுடையமனுவைக் கவனிக்கிறேன் நீ போகலாம் என்று அனுப்பிவிடுவார். இந்தி தெரிந்த ஒருவருக்கு அந்த வேலைகிடைக்கும். இந்தி தெரியாதவருக்கு வேலை கிடைக்காது. தபால்காரர் வேலைமட்டுமல்ல, இன்னும்பல உயர்ந்த உத்தியோகங்களும் இந்தி தெரிந்தவர்களுக்கு மட்டும் தரப்படுவதாக அமையும் மத்திய அரசாங்கத்தில் உள்ள இலாக்காக்களின் எண்ணிக்கையும் அவைகளில் தரப்படுகிற உத்தியோகங்களின் தொகையும் உங்களில் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம், மத்திய அரசாங்கத்தின் கீழ் ஏராளமான உத்தியோகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் ஏராளமானமத்திய இலாக்காக்கள் பணியாற்றுகின்றன. உதாரணமாக, இன்சூரன்சு துறையை எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள்ஒரு இன்சூரன்சு ஏஜண்டாகநினைத்தால் இந்தி தெரியுமா? என்று கேட்பார்கள் உங்களுக்கு இந்தி

(12-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 27—10—57 சென்னை

தமிழ்நாட்டில் இந்தி!

★ இரா. நெடுஞ்செழியன்

இந்திய துணைக்கண்டத்தில், சென்னை மாநிலத்தில் மட்டும் இந்தி கட்டாயப்படுத்தாமலிருப்பதாகவும், உடனடியாகப் பள்ளிக்கூடங்களில் இந்தியைக் கட்டாயமாக வைக்கும்படி சென்னை மாநில அரசாங்கத்தினருக்கு டில்லி ஆட்சியாளர்களிடமிருந்து ஒரு சுற்றறிக்கை வந்திருப்பதாகப் பத்திரிக்கைச் செய்திகள் அறிவிக்கின்றன.

மேலிடத்திலிருந்து அறிக்கை வந்திருக்கிறதென்றால், ஒன்றைச் செய்து முடிக்கவேண்டுமென்ற கட்டளை வந்திருப்பதாகத்தான் பொருள்படும்.

இந்தி பரவுவதற்கு சென்னை மாநில அரசாங்கம் தடையாக உள்ளது என யாரும் நினைத்துவிடக்கூடாது. கல்வித்துறையில் இந்தி கட்டாயப் படுத்தப்படவில்லையென்றாலும், மற்றும் பலவழிகளில் இந்தியைப் பரப்புவதில் சென்னைக் காங்கிரசு அரசாங்கமும் மந்திரிகளும் பாடுபட்டு வருகிறார்கள். கட்டாய இந்தியில் பின்தங்கியுள்ளதாக சென்னை மாநிலத்தைச் சுட்டிக்காட்டுகிற மத்திய அரசாங்கமே முன்பொரு அறிக்கையில், தென்னாட்டில்தான் இந்தி மிகப்பக்குவமானமுறையில் வெற்றிகரமாக பரப்பப்படுவதாக சென்னை அரசாங்கத்தைப் பாராட்டியுள்ளனர். ஆக இந்திக்கு எதிராகச் சென்னை அரசாங்கம் இருப்பதாகக் கூறமுடியாது. "பக்குவமான முறையில் வெற்றிகரமாக" பரப்புவதில் அது கண்ணுங் கருத்துமாக இருக்கிறது. மற்ற மாநிலங்களைப்போல, வெளிப்படையாக இந்தியைக் கட்டாயப்படுத்த சென்னை மந்திரிசபை முன்வராததற்குக் காரணம் இந்தி பிடிக்காத காரணம் அல்ல, அதைக்கட்டாயப்படுத்தும் வலிவுஅவர்களுக்குக்கிடையாது.

"இந்தி வேண்டாம், தமிழ் போதும்!" என்று கூறும் அளவுக்கு சென்னை மந்திரிகளுக்கு ஆற்றலும் கிடையாது, தமிழ் உணர்வும் கிடையாது.

தமிழ்நாட்டை "தமிழ்நாடு" என்று அழைக்கக்கூட வகையற்ற—தன்மான உணர்ச்சியற்ற மந்திரிகளிடம் தமிழ்ப்பற்றைக் காணமுடியாது!

கல்வித்துறையில் கட்டாயப்படுத்தத் தயங்குகிறார்களென்றால், கட்டாயப்படுத்தினால் என்ன நேருமோ, மந்திரி பதவிக்கு என்ன ஆபத்து வருமோ என்று கலக்கம்தான் மந்திரிகளைப் பயமுறுத்துகிறது. அதனால்தான் கட்டாயப்படுத்தாமல், பக்குவமாக வெற்றிகரமாக இந்தியைப் பரப்புவதற்குக் காங்கிரசு மந்திரிசபை ஒத்துழைக்கிறது.

பெருவழியில் குறுக்கே நின்று தடியைக் காட்டிப் பயமுறுத்தி, வழியில் நடப்பவனிடம் உள்ளபொருளைக் கட்டாயமாகப் பிரித்து எடுத்துச் செல்வது ஒருவகை வழிப்பறி! மற்றொருவகை, எதிரில் வராமல் பதுங்கிப் பதுங்கிவந்து செடிக்குப் பின்னால் மறைந்து நின்று, வழிநடப்பவன் களைப்பால் அயர்ந்திருக்கும் வேளையில் அவனுக்கும் தெரியாமல் பொருளைத்தட்டிச் செல்வது மற்றொரு வகை! இந்த இரண்டு வகைகளில் எது நல்லது எது தீதானது என்று கூறமுடியாது. எதிரில் வந்து கட்டாயப்படுத்தி பறித்துச் செல்வதும், மறைந்துவந்து களவாடிச் செல்வதும், இரண்டும்-வழிப்பறி வழிப்பறிதான்!

அதுபோல, இந்தி கட்டாயப்படுத்தித் திணிக்கப்படுகிறதா? அல்லது கட்டாயப்படுத்தாமல் நுழைக்கப்படுகிறதா? என்பதல்ல கேள்வி. கட்டாயமாக வந்தாலும், கட்டாயப்படுத்தப்படாமல் வந்தாலும், இந்திவருவது சரியா என்பதை நாம் உற்று ஆராயவேண்டும். தென்னாட்டுக்கு இந்தி தேவைதானா என்பதில் தெளிவு பெறவேண்டும். அரசாங்க மொழியாகவோ ஆங்கார மொழியாகவோ இந்தி வரவேண்டுமா என்பதை நாம் வரையறுத்துக் கொள்ளவேண்டும்.

இந்தி எந்த வகையில் வரவேண்டும்?—அது முக்கியமான பிரச்சினையல்ல! இந்தி வரவேண்டுமா?—அந்த அடிப்படைக் கேள்விக்கு முதலில் நாம் பதில் சொல்லியாக வேண்டும். காங்கிரசு மந்திரிகளும் அரசாங்கமும் அந்த முதற்கேள்வியை அலட்சியம் செய்துவிடுகிறார்கள், அந்தக் கேள்விக்குப் பதில் கொடுக்க முயன்றால் டில்லி தேவதையின் சீற்றத்துக்குப் பலியாகவேண்டுமே என்று அஞ்சுகிறார்கள்.

சென்னை மாநிலத்தில்கூட, பள்ளிக்கூடங்களில் இந்தி கட்டாயம் இல்லை என்றால்கூட, மற்றும் பலதுறைகளில் அது கட்டாயமாகப் புகுத்தப்பட்டுவருகிறது. வானொலியில், தபால்-தந்திகளில், இரயில்வேயில், படக்காட்சிகளில், பிரசார சபைகளில்-இவ்வாறு பல வகைகளில் இந்தி புகுத்தப்படுகிறது. இவைகளுக்குக் கோடிக்கணக்கில் மக்களின் வரிப்பணம் வாரியிறைக்கப்படுவதுடன், அரசாங்க ஆதரவும் தரப்படுகிறது. கட்டாயமென்றாலும், இல்லையென்றாலும், பல்வேறு துறைகளிலும் இந்தியைக் கொண்டுவருவது, தென்னாட்டிலுள்ளவர்கள் இந்தியைக் கற்றுத்தான் ஆகவேண்டும் என்ற நெருக்கடியான நிலைக்குத் துரத்துவதாகும்.

பசுங்கிளிப் பறக்காமலிருக்க, உரிமையுடன் வட்டமிட்டு வராதிருக்க, அதன் இறகுகளை ஒடித்துவிடுவது ஒரு வகை. அல்லது அதனை ஒரு கூண்டிலே அடைத்துவிடுவது மற்றொரு வகை! சிறகு ஒடிக்கப்படாவிட்டாலும், சுற்றிலும் சிறைக் கம்புகள் தடுத்தால், சிறகு ஒடிக்கப்பட்டதைப்போல, பறக்க முடியாமல் ஒடுங்கிக்கிடக்கவேண்டியதுதான்! அதைப்போல, தென்னாட்டை ஒடுக்கிட, சுற்றிலும் சிறைக்கம்பிகள் போடப்படுகின்றன! சிறிது காலத்துக்கெல்லாம், கூண்டிலே அகப்பட்ட கிளிபோல தென்னாடு வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத்தால் சிறையெடுக்கப்பட்டு அடிமை வாழ்வு வாழவேண்டியதுதான்!

கல்வித்துறையில் இந்தியைக் கட்டாயமாக்குவது குறித்து டில்லி மேலிடம் அனுப்பியுள்ள சுற்றறிக்கைக்கு சென்னை மாநிலம் எந்த விதப் பதிலைத் தரும் என்று கூற முடியாது. கட்டாய இந்தியைக் கொண்டுவருவார்களா அல்லது இப்பொழுது இருப்பதைப்போலவே, "பக்குவமான முறையில் வெற்றிகரமாக" இந்தியைப் பரப்பிக் கொண்டிருப்பார்களா என்பது தெரியவில்லை.

மந்திரி பதவியில் இருப்பவர்களின் மனப்போக்கும் சாமர்த்தியமும் எப்படி இருந்தபோதிலும், மக்களின் தீர்மானம் தெளிவாக அக்டோபர் 13இல் அறிவிக்கப்பட்டுள்ளது. தென்னாட்டுக்கு எந்த வகையிலும் இந்தி தேவைப்படாது என்பது திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாற்றுக்கட்சியினராகிய நாம்மட்டும் அரசாங்க இந்திக்கு எதிராக அணிவகுத்து நிற்கவில்லை. காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களிலேயே பலர்—மந்திரி பதவி போன்ற சங்கடமான நிலைகளில் சிக்காதவர்கள்—இப்பொழுது காங்கிரசிலுள்ளவர்களைவிட அதிகமாகக் காங்கிரசிற்கும் நாட்டுக்கும் தெரிந்தவர்களுமாக உள்ளவர்களும், இந்தி அரசாங்க மொழியாக—ஆளும் மொழியாக வருவதை எதிர்த்து நிற்கின்றனர். ஆனால் எதனையும் பொருட்படுத்தாமல், எதேச்சாதிகாரப் போக்கில் மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் இந்தியைத் திணிப்பதில்—கட்டாயமாகவோ மறைமுகமாகவோ—தொடர்ந்து ஈடுபடுமேயானால், வரலாற்றில் எதேச்சாதிகாரிகளுக்குத் தரப்பட்ட பாடம் திருப்பி இங்கும் படிக்கப்படும் என்பதை அறிவுறுத்துகிறோம்! ○

வினா: அந்நிய மொழியான ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாகவோ அல்லது பொது மொழியாகவோ எப்படி ஆக முடியும்?

விளக்கம்: 'இந்தியா' ஒரே மொழிவழங்கும் ஒரு நாடல்ல என்பதையும், அது பல்வேறு இனத்தவரால் பேசப்படும் பல்வேறு மொழிகள் வழங்கும் ஒரு துணைக்கண்டமாகும் என்பதை ஒவ்வொருவரும் முதலில் உணர்தல் வேண்டும்.

இந்தியத் துணைக்கண்டத்திற்கு உரிமைவாய்ந்தனவாகவும், உரிமைவாய்ந்தனவாகக் கருதப்படுவனவாகவும், அமைந்துள்ள மொழிகள் 782-இது உலக அரசியல்-வாணிகப்-பண்பாட்டுத் தொடர்பு கொள்வதற்கும், உலக அறிவியல் அறிவை அறிவதற்கும் ஏற்ற மொழியாக எதுவும் இன்றைய நிலையில் அமையவில்லை. இந்தியத் துணைக்கண்ட ஆட்சியை எல்லாத்துறைகளிலும் ஏற்று நடத்தவும், படித்தவர்கள்-சிறந்த அரசியல் தலைவர்கள்-வளர்ந்த வணிகப்பெருமக்கள் குற்றேவல் புரியும் பியூனிலிருந்து குடியரசுத் தலைவர்வரையிலுமுள்ள அரசாங்க அலுவலாளர்கள் ஆகியோரிடம் பொதுப்படையாகப் பரவி நின்று பயன் விளைக்கவும் ஏற்றதாக எந்த ஒரு இந்தியமொழியாவது அமைந்திருக்கிறதைவிட ஆங்கிலமொழி ஒன்றுமட்டுந்தான் பெற்றிருக்கிறது என்பதை இந்திமொழி வெறியர்கள் உள்பட இந்தியாவிலுள்ள அனைத்து மொழியினரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் இந்திமொழி வெறியர்கள் "ஆங்கிலம் அந்நிய மொழி" என்ற ஒரே காரணத்தைக் காட்டி, "ஆகவே அது ஆட்சி மொழியாகவோ பொதுமொழியாகவோ இருக்கக்கூடாது. இந்தியாவின் மொழியான இந்தியே ஆட்சிமொழியாகவும் பொதுமொழியாகவும் இருக்கவேண்டும்" என்று வாதாடுகின்றனர்.

ஆங்கிலம் அந்நிய மொழி என்பதற்காக அதனை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றால், அதேபோன்று தமிழர்க்கும், தெலுங்கர்க்கும், கன்னடியர்க்கும், மலையாளிகளுக்கும், மராட்டியர்க்கும், வங்காளிகளுக்கும் அந்நிய மொழியான இந்தியை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற முடிவுக்குத்தான் மற்ற மொழியாளர்களும் வரவேண்டியது நியாயமாகும். இன்னமும் சொல்லப்போனால், தமிழர் போன்ற இந்தியல்லாத மொழியாளர்க்கு ஆங்கிலத்தை விட இந்திதான் மிக மிக அந்நிய மொழியாகும். ஆங்கிலம் சென்ற இருநூறு ஆண்டு காலத்திற்கு மேலாக நெருங்கிப் பழகி சிலர்க்கு நல்ல முறையிலும், பலர்க்கு பொதுவான முறையிலும் அறிமுகமாகி நல்ல உறவை தமிழர்போன்றோரிடத்தில் ஏற்படுத்திக்கொண்டுள்ளது. ஆனால் அந்த அளவு உறவு இந்திக்கும் தமிழர்களுக்கும் இல்லை. தமிழர்களின் முன்னால் இந்தியையும், ஆங்கிலத்தையும் நிறுத்தினால் இரண்டில் எது மிக அந்நிய மொழி என்று கேட்டால், இந்திதான் என்பது புலப்படும். ஒருவனுக்குத் தன் தாய்மொழியல்லாத பிறமொழிகள் அனைத்தும் அந்நிய மொழிகள்தாம். இன்றைய நிலையில் அந்த அந்நிய மொழிகளில், தமிழர்க்கு எல்லாவகையிலும் எல்லதுறைகளிலும் உதவியாக நின்று பயனளிக்கக்கூடிய மொழி எது என்று கேட்டால், அது ஆங்கிலம்தான் என்பது இனிது பெறப்படும்.

ஆங்கிலம் அந்நிய நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த மொழியாகுமே என்றால், இந்தியும் இந்தியாவிற்கு ஒரு வகையில் வந்த மொழிதான். இந்தியத் துணைகண்டத்திற்கு உரிய முதல் மொழிகள் திராவிடக் குழுமொழிகள்தாம். முதலில் இந்தியாவில் குடியேறியமொழி இலக்கண இலக்கிய வளம் பெறாத பிராகிருதமாகும். அப்படிக் குடியேறிய பிராகிருதத்திலிருந்து செம்மைப் படுத்தப் பட்ட மொழிதான் சமஸ்கிருதம் ஆகும். அந்தப்படிக்குச் சமஸ்கிருதமும் குடியேறிய மொழியாகிறது. அராபியமும், பாரசிகமும் பிற்காலத்தில் குடியேறிய அந்நிய மொழிகளாகும். இந்த மூன்று அந்நிய மொழிகளுக்கும் சேர்ந்து பிறந்த மொழிதான் இந்தி. 'இந்தி' என்ற சொல்லே அராபிச்சொல்தான். எனவே இந்தியும் ஒரு வகையில் அந்நிய மொழி என்றுதான் ஆகிறது. இந்தி முன்னால் குடியேறி நின்ற அந்நியமொழி என்றால் ஆங்கிலம் பின்னால் குடியேறி நின்ற அந்நிய மொழியாகும். எனவே அந்நிய மொழி என்ற காரணத்தைக் காட்டி ஆங்கிலத்தைப் புறக்கணித்து விட்டு, இந்தியைப் பிறர் மீது திணிக்க முயலும் வாதம் பொருத்தமற்ற வாதமாகும்.

இந்தி, குடியேறிய மொழிகளிலிருந்து பிறந்த ஒரு மொழியாக இருந்த போதிலும், இந்தியாவிலேயே பிறந்துவளர்ந்த மொழி என்ற காரணத்தால் அதனை ஏற்றுக் கொள்ளலாம், ஆங்கிலம் இந்தியாவில் குடியேறி வாழ்கின்ற மொழியாதலால் அதனை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று வாதாடப்படுமேயானால், அந்த வாதமும் பொருத்தமற்ற வாதமாகவே முடிகிறது. இந்தி இந்தியத் துணைக்கண்டத்துமொழிகளில் ஒன்றாக எப்படி ஆகிவிட்டதோ அப்படியே ஆங்கிலமும் இந்தியத்துணைக்கண்டத்து மொழிகளில் ஒன்றாக ஆகிவிட்டது. இந்தியாவில் இலட்சக்கணக்கான ஆங்கிலோ-இந்தியர்கள் வாழுகிறார்கள். அவர்களின் தாய்நாடு எது என்றால் 'இந்தியா'! அவர்களின் தாய்மொழி எது என்றால் 'ஆங்கிலம்'! எனவே 'ஆங்கிலம்' இந்தியாவிற்குரிய ஒரு பிரிவு மக்களின் மொழியாகிறபடியால் இந்தியாவின் முக்கிய மொழிகளிலே அதுவும் ஒன்றாக ஆகிவிடுகிறது. இந்தியாவின் பல தேசிய மொழிகளில் ஆங்கிலமும் ஒன்றுஎன்றால், அதுமிகையாகாது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கும் பதினான்கு தேசிய மொழிகளோடு, 'ஆங்கிலம்' என்ற பதினைந்தாவது தேசிய மொழியையும் சேர்த்து, அந்த வலிவும் பொலிவும், ஆற்றலும் மிக்க தேசிய மொழியையே இந்தியாவின் பொதுமொழியாகவும், ஆட்சிமொழியாகவும் ஆக்குவதில் எவ்விதக் குறைபாடும் இல்லையே.

எனவே பயன்மிக்க ஆங்கிலத்தை அந்நியமொழி என்று காரணங்காட்டி அகற்றிவிட்டுப் பயன்படாத இந்தியைத் திணிக்க முயலுவது ஏற்றதாகாது, முறையாகாது, நீதியாகாது, நேர்மையாகாது, சனநாயகமாகாது.

* * *

வினா: திராவிடக் கூட்டாட்சியின் ஆட்சி மொழியாக எது இருக்கும்?

விளக்கம்: திராவிடக்கூட்டாட்சியில் நான்கு மொழிவழி மாநிலத்தார் அமைகிறார்கள். தமிழர் சுமார் மூன்று கோடியும், தெலுங்கர் சுமார் மூன்று கோடியும், கன்னடியர் சுமார் ஒன்றரைக் கோடியும், மலையாளிகள் சுமார் ஒன்றேகால் கோடியும் பிறர் எல்லாம் சேர்த்து சுமார் ஒன்பது கோடி மக்கள் திராவிடத்தில் வாழுகிறார்கள்.

திராவிடக்குழு மொழிகளில் ஒன்றான துளுவைத் தாய்மொழியாகக் கொண்டவரின் எண்ணிக்கை மிகக் குறைவானபடியாலும், அவர்களின் வட்டார மொழி கன்னட மொழி என்று அமைந்துவிட்டபடியாலும் துளு மொழியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.

திராவிடக்கூட்டாட்சியைப் பொருத்த வரையில் தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் ஆகிய நான்கு மொழிகளுமே ஆட்சிமொழிகளாக அமைக்கலாம். திராவிடத்தைவிடச் சிறிய நாடுகளான சுவிட்சர்லாந்து மூன்று ஆட்சி மொழிகளையும், கனடா இரண்டு ஆட்சிமொழிகளையும், தென் ஆப்பிரிகா இரண்டு ஆட்சி மொழிகளையும் கொண்டிருப்பதைப்போல திராவிடம் நான்கு ஆட்சி மொழிகளை எளி... தில் கொள்ளலாம்.

திராவிடக்குழுமொழிகள் நான்கினுள் ஒருமொழியினர் மற்றொருமொழியைப் புரிந்து கொள்வதும் பேசஎழுதக் கற்றுக் கொள்வதும் அவ்வளவு கடினமான ஒன்றல்ல. தேவையும் விருப்பமும் உள்ளவர்கள் தங்கள் தாய்மொழியோடு ஒன்றிரண்டு திராவிடக்குழுமொழிகளையும் எளிதில்கற்றுக்கொள்ளலாம். திராவிடக்குழுமொழிகளான தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் ஆகிய நான்கையும் திராவிடக்கூட்டாட்சியின் ஆட்சிமொழிகளாக ஆக்குவதால், ஒவ்வொரு மொழிப்பிரிவினரும் தத்தம தாய்மொழியையே தத்தம் மாநில ஆட்சி மொழியாகக் கொள்ளவும், அதனையே திராவிடக்கூட்டாட்சியின் மொழியாகக் கொள்ளவும் இயலும்.

அவசியமுள்ளவர்கள் தங்கள் தாய்மொழியினர் அல்லாத பிற உலகமக்களோடு தொடர்பு கொள்ள ஆங்கிலத்தைக் கட்டாயம் கற்றுக்கொள்ளப்போவதால், அகில உலகத்தொடர்பு கொள்வதற்கும், அகில ஆசியாத்தொடர்பு கொள்வதற்கும், அகில இந்திய தொடர்பு கொள்வதற்கும் ஆங்கிலமே போதுமானதாகப் போகிறது. அந்த ஆங்கிலமே அவசியம் ஏற்படும் போது திராவிடத்திலுள்ள ஒரு மொழியினர் மற்றொரு மொழியினரோடு தொடர்பு கொள்வதற்கும் பயன்படும் ஒரு மொழியாக அமைந்துவிடும்.

திராவிடத்திலுள்ளவர்கள் தங்கள் தாய்மொழியோடு அ... வது வட்டார மொழியோடு அகில உலகப் பொது மொழியான ஆங்கிலத்தையும் கற்றுக் கொண்டால் போதும். வேறு மொழியின் துணையின்றி இனிது வாழ வழி ஏற்பட்டுவிடும்.

—இ[illegible]

(இலக்கியம்)



காதலியைக் கைவிட்ட காதலன்!

இயற்கைவளங்கள் பலவும் கொழிக்கும் செழுமைமிக்கமலை! அதன் சரிவுகளில் வாழைமரத் தோட்டங்கள் செறிந்து காணப்படுகின்றன.

இலைகள் அகன்ற செவ்வாழைகள், தோட்டங்கள்தோறும் தழைத்தோங்கி வளர்ந்து நிற்கின்றன. போர்க்களத்திலே புகுந்து போரிட்டுத் திரும்பும் வலிமைமிக்க யானையின் குருதி படிந்த தந்தம்போல வாழைத்தாறுகளின் கொழுத்த முகையும் கூந்தலை முடித்துப்போடும் பெண்களின் அழகிய கூந்தல் முடிச்சுபோலத் தொங்கும் வாழைப்பூவும் காண்பதற்கு இனிய காட்சிகளாக விளங்குகின்றன.

இவ்வித வளம்மிக்க மலைக்கு உரியவனான மலைநாடன் இளமையும், அழகும், ஆற்றலும் பொருந்தியதொரு செம்மலாக வளர்ந்துவருகிறான். அவன் செல்வக்குடியிற்றோன்றிய ஒரே பிள்ளையாதலால் பெற்றோராலும், உற்றார் உறவினராலும் செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பட்டுவருகிறான். அவன் கவலையற்ற வாழ்வில் வாழ்ந்து, ஆடல்பாடல் களியாட்டங்களில் கவனம்செலுத்திக் காலங்கழித்துவருகிறான்.

பொதுமகளிரின் ஆடல் பாடல்களைக் கண்டுகளிப்பதிலே ஈடுபட்டிருக்கும் மகன், அவர்களால் கவரப்பட்டுவிடக்கூடாதே என்று கருதிய பெற்றோர்கள் அவனுக்குத் திருமணம் முடிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்கின்றனர். தலைவன் தன்னால் காதலிக்கப்படுபவளும் வேற்றூரைச் சேர்ந்தவளும், செல்வக்குடியில் தோன்றியவளும், அழகுமிக்கவளுமான நங்கை ஒருத்தியைச் சுட்டிக்காட்டி அவளையே திருமணம் செய்துகொள்ளப் போவதாகக் கூறுகிறான். பெற்றோர்களும் அவன் விருப்பத்திற்கிணங்கச் சிறப்பான முறையில் திருமணத்தை நடத்தி வைக்கிறார்கள்.

தலைவனும் தலைவியும் இல்லற இன்பத்தில் திளைத்துக் கிடக்கின்றனர். சில திங்கள்கள் கழித்துத் தலைவி கருவுறுகிறாள். காதலி கருவுற்றிருக்கும்போது அவளருகில் இருந்து, அவளுக்குப் பேருதவிகள் செய்து, பெருந்துணையாக இருக்கவேண்டிய காதலன் அவளைப்பற்றிக் கவலை ஏதும் கொள்ளாமல், பொதுமகளிரின் ஆட்டபாட்டங்களைக் காணச் செல்வதிலே மிக்க அக்கறை எடுத்துக்கொள்கிறான்.

தலைவனின் மனநிலையை அறிந்துகொண்ட பாணன் ஒருவன் தலைவனை நண்பனாக ஆக்கிக்கொண்டு, அவனிடம் வேண்டிய பொருளைக் கறக்கலாம் என்ற எண்ணத்துடன், பரத்தையர்பற்றிய செய்திகளையெல்லாம் சொல்லி, அவர்களிடம் வேண்டிய இன்பம் துய்க்கலாம் என்ற ஆசையைத் தலைவனுக்குஊட்டுகிறான். பாணன் ஆடல்பாடல்களிலே பெயரும் புகழும் பெற்றவரும், இளமைநலமெலாம் மிக்கவரும், அழகானத் தோற்றப் பொலிவு கொண்டவளுமான பரத்தை ஒருத்தியைத்தலைவனுக்கேற்ற காதல் பரத்தையாக ஆக்கத் திட்டமிடுகிறான். பாணனின்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

கனிந்த மொழிகளிலே மயங்கிய தலைவன் அந்தக் காதற்பரத்தையை அடைய ஒருப்படுகிறான். காதற்பரத்தையோடு சேர்ந்து காமக்களியாட்டங்களில் ஈடுபடுகிறான். காதற்பரத்தைத்தரும் இன்பமே பேரின்பம் என்று கருதித் தலைவியும், பெற்றோர். உற்றார், உறவினர், வீடுவாசல்களையும் மறந்து வாழ்கிறான்.

தலைவனது பிரிவாற்றாமை தாளாமல் தலைவி மிகவும் வருந்துகிறாள். தலைவன் எங்கு போயினனோ, அவனுக்கு என்ன கேடு ஏற்பட்டதோ என்று எண்ணிக் கலங்கிய தலைவி, தோழியை விட்டு ஊரெல்லாம் தேடச்சொல்லுகிறாள். ஊர்முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டுவந்த தோழி, ஊரார் மூலம் செய்தியறிந்து, தலைவன் காதற்பரத்தையின் இல்லத்தில் வாழ்வதைத் தெரிவிக்கிறாள். அதுகேட்ட தலைவி மனம் உடைந்துபோய், நலமெலாம் இழந்து, வாட்டத்தோடும் வருத்தத்தோடும் இருக்கிறாள். தன்னிடம் வருவோரிடமெல்லாம் தன் அருமைக்காதலனை மயக்கிய காதற்பரத்தையைப்பற்றி இழித்தும், பழித்தும், ஏசியும் பலவாறாகக் கூறித் தன் ஆத்திரத்தை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறாள். அந்தக் காதற்பரத்தையைப் பார்க்கிற ஊரார் தலைவி படும் துன்பத்தைப்பற்றியும், அவள் ஏசுகிற ஏச்சுக்கள்பற்றியும் எடுத்துக் கூறுகின்றனர். காதற்பரத்தை, அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், தலைவனின் கவர்ச்சியைத் தன்பால் எப்பொழுதும் நிலைநாட்டுவதிலே கவனம் செலுத்திவருகிறாள்.

தலைவி நாளடைவில் ஆண் மகவு ஒன்றை ஈன்றெடுத்து, அதனைச் சீராட்டிப் பாராட்டிப் பேணி வளர்ப்பதிலே தன் முழுக் கவனத்தையும் செலவிட்டு வருகிறாள். தலைவனின் பிரிவாற்றாமையால் ஏற்படும் துயரை அருமை மகனைக் கொண்டு சிறிது ஆற்றிக் கொள்கிறாள்.

தலைவன் சிறிதுநாட்களில் வேறோர் அழகுமிக்க பரத்தையை நாடி இவளைக் கைவிட்டுச் சென்று விடுகிறான். தலைவனைக் காணாதுபோகவே, அவன் தலைவியிடம் போய்ச் சேர்ந்திருப்பானோ என்று எண்ணிக்கொண்டு, அவனைக் கண்டு மீண்டும் அழைத்துக் கொண்டு வரலாம் என்ற எண்ணத்துடன் காதற்பரத்தை மலைநாட்டு மாளிகைக்குச் செல்லுகிறாள்.

தொய்யிற்குழம்பால் உடலை அழகுபடுத்திக் கொண்டு, அழகிழ ஆடைகளையும் அணிகலன்களையும் அணிந்து கொண்டு ஒருத்தி வாயிற்படியில் வந்து நிற்பதைத் தலைவி பார்க்கிறாள். கைக் குழந்தையைத் தொட்டிலில் போட்டு ஆட்டிவிட்டு விட்டு, அவளை அணுகி "நீ யார்? எங்கு வந்தாய்?" என்று கேட்கிறாள்.

அதற்கு அவள் "நான் இந்த ஊர்தான். அவரைப் பார்க்க வந்தேன்!" என்கிறாள்.

"அவர் என்றால், யார்?"

"அவர்தான் உங்கள் தலைவரை!"

"அவரை உனக்குத் தெரியுமா?"

"நன்றாகத் தெரியுமே!"

"அவரை எப்படித் தெரியும்?" என்று தலைவி கேட்டுக்கொண்டிருக்கும்போது தோழி அங்கு வருகிறாள். அவள் காதற்பரத்தையைப் பார்த்தவுடன் திடுக்கிட்டுப் போய் "இவள் எங்கே வந்தாள்?" என்று உரத்தக் குரலில் கேட்கிறாள்.

"இவள் யார் என்று உனக்குத் தெரியுமா?" என்று தலைவி தோழியை வினவுகிறாள்.

"இவள்தான் நம் தலைவரை மயக்கிக் கெட்டொழியச் செய்தவள்!" என்கிறாள்.

உடனே தலைவி வெகுண்டு போய் "இவளா? இந்தச்செருக்கியா? இந்த மானங்கெட்டவள்தான் என் தலைவரை மயக்கியவளா? அடி! குடி கெடுத்தவளே! நான் உனக்கு என்னடி கேடு செய்தேன்? ஏனடி இப்படி எனக்கு இந்தத் துன்பம் இழைத்தாய்? நான் நன்றாய் இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையாடி?" என்று பலவாறாக அவளைப் பார்த்துத் தூற்றத் தொடங்குகிறாள்.

"என்னை ஏன் வீணாகத் திட்டுகிறீர்கள்?" என்று காதற்பரத்தை கேட்கிறாள்.

"நீ தானேடி என் காதலரை மயக்கி அழைத்துக்கொண்டு போய் விட்டாய்!" என்று தலைவி சினந்து கொள்கிறாள்.

"நான் ஒன்றும் அவரை மயக்கவில்லை! அவராகத்தான் என்மீது மயக்கங் கொண்டு வந்து சேர்ந்தார்!" என்றாள் பரத்தை.

"இப்போது எங்கேடி அவர்?"

"அவர் இங்கு வரவில்லையா?"

"இங்கே வந்து விளையாடுகிறாயா? உன்னிடம் அடைக்கலம் புகுந்த அவரை நீதானேடி ஒளித்து வைத்திருக்க வேண்டும்?"

"அவர் என்னிடம் ஒன்றும் அடைக்கலம் புகவில்லை! இப்பொழுது வேறு யாரிடமோ போய் அடைக்கலம் புகுந்து விட்டார்!"

"நீதானேடி அவரை முதலில் அழைத்துக் கொண்டு போய்ச் சீர்கெட வைத்தது?"

"நான் ஒன்றும் அவரிடம் போய் இரந்து நிற்கவில்லை, அவராகத்தான் வந்து என்னை இரங்கிக்கேட்டு, என்னிடம் இன்பம் நுகர்ந்தார். இப்பொழுது என்னைக் கைவிட்டு விட்டு வேறொருத்தியிடம் போய் விட்டார்!"

"இப்பொழுது ஏன் நீ அவரைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறாய்?"

"அவர் எனக்குப் பொருள் கொடுக்க வேண்டியிருக்கிறது! அதைக் கேட்டுப் பெறவே வந்தேன்!"

"அவர்எங்கேபோய் அடைக்கலம் புகுந்திருக்கிறாரோ அங்

(10-ம் பக்கம் பார்க்க)

றுகதை

வாழ வேண்டும்

(நெல்லை அருணன்)

“அய்யா! நாங்கள் வாழ வேண்டும் - வாழும் வகை வேண்டும்-வாழ விட வேண்டும்” என்று எத்தனையோ முறை அபயமிட்டு அலறித் துடித்துக் கேட்கிறேன். யாரைக் கேட்பது - யாரைக் கேட்கவேண்டும் - யார் வாழ வைப்பார்கள்.

என் வாழ்வை வதைப்பதும் வாழ்வுப்பாதையில் தடையாக நிற்பதும்-வாழ முடியாதென அறிவிப்பதும் சமுதாயந்தான். சமுதாயத்திடம் மண்டியிடுகிறேன், கெஞ்சுகிறேன் அழுது புலம்பிப் புரண்டு அனுதினமும் அஞ்சலியிடுகிறேன்; ஏற்றுக் கொள்ளவில்லையே சமுதாயம்!

ஒருவேளை சமுதாயமென நான் கருதிக்கொண்டிருக்கும் உருவகம் தவறோ? இருக்கக்கூடும். இல்லை என்றால் இவ்வளவு மனமுருக நான் கேட்டுக்கொண்டும் எனது வேண்டுகோளை ஏற்க மறுத்திருக்குமா? அப்படியானால் சமுதாயந்தான் எது? எந்த வடிவில் இருக்கும்? எப்படிப்பட்டது? யார்தெரிவிப்பார்கள் - யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வது? யாரையுங்காணேனே என் செய்வேன்.

காற்று வெளியையும் - கடல் பரப்பையும் - ஆகாயத்தையும் நோக்கி அலறுகிறேன். அப்போதும் சமூதாயத்திற்கு என் மீது இரக்கம் ஏற்படவில்லை. தப்பு-தப்பு - சமுதாயமென்றே ஒன்று இல்லை. மனித இனந்தான் சமுதாயம், மனிதன் தன் மனப் போக்குக்குச் சாதகமானவர்களைச் சேர்த்துக்கொண்டு தன் விருப்பத்தை - அதாவது ஒரு தனி மனிதனின் விருப்பத்தை நிறைவேற்ற உபயோகப்படுத்தும் சொல் சமுதாயம். அல்லாது வேறென்ன இருக்க முடியும்?

காதலுக்குத் தடை விதித்துக் காதல் கை கூடாதவாறு சிதைத்துக் காதலித்தவர்களைக் கண்ணீரும் கண்ணுமாகச் சொல்லும்படி செய்கிறார்கள். செய்தது சமுதாயம் என்கிறார்கள். செய்வது யார்? யாரோ ஒருவன்-ஏதோ ஒரு காரணத்துக்காக - எதையோ முன்னிட்டுச் செய்கிறான். தன் ஒற்றைக் குரல் ஓங்காதபோது கூட்டுச் சேர்த்துக்கொண்டு கூக்குரலிடுகிறான்! அவனும் அவன் கூட்டமும் தானா சமுதாயம்? அப்படியானால் இந்தச் சமுதாயத்தின் சொந்தக்காரர்களாக வந்து நின்று காட்சியளிப்போர் செயல்கள்-நடைமுறைகள்-எவ்வாறிருக்கிறது? அவர்கள் யாராக இருக்கிறார்கள்?

அடுத்தவர்வாழ்வைக்கெடுப்போர் - ஆண்டவன் பக்தர் போல்தோற்றமளித்து அநீதம் பலபுரிவோர் - கொலைகளுக்கும் அஞ்சாக் கொடுமையாளர்-குடிகெடுத்துக் குடிவளர்ப்போர்-எப்போதும் நல்லெண்ணம்-நல்லவழி-நல்லன நாடியறியாதவர்கள், இவர்கள்தானே! இவர்களைத் தலைமையாகக் கொண்டிருக்கிறது சமுதாயம் என்னும் சூத்திரம். இதற்கு உருவம் கிடையாது-உருவகப் படுத்திய வகையும் உருவாயமைந்தது கிடையாது. இதன் கொடுஞ் செயலுக்கும் கோரப்பிடிக்கும் பிடிபட்டுப்பரிதவித்தோர்பலர்-பலியானோர் ஏராளம் - பதை பதைத்து நைந்து துடித்துக் கொண்டிருப்போர் அநேகம்! இதிலே நானும் ஒருவனாகி விட்டேன். இல்லை! ஆக மாட்டேன் -அதனை எதிர்ப்பேன்! அழிப்பேன்! வெற்றி காண்பேன்!”

என்கின்ற எண்ண எழுச்சியுடன் ஏதும் செயலற்றுத் தலை நிமிர்ந்து எங்கோ நோக்கிக் கொண்டிருந்த ஆனந்தனை, அவன் நண்பன் அன்புசாமி முதுகில் தட்டிய வண்ணம் அழைத்தான்!

அன்பு: ஆனந்தா! எங்கேயப்பா உன் கூரிய நாட்டம்? எதிலே உன் ஆழ்ந்த சிந்தனை! என்ன நேர்ந்தது ஆனந்தா!

ஆனந்: ஆனந்தன்! பெயரளவில்தான்! ஆனந்தம் — அமைதி-இவைகளை நான் சந்தித்ததேஇல்லை. அழுகை-அலைக்கழிவு-அயர்வு இவைகளைத்தான் அனுதினம் சந்திக்கிறேன். இவைகள் தான் எனக்கு நித்திய மூச்சாக அமைந்திருக்கிறது. காலையில் எழுந்தால் கவலை, கண் திறந்து கருத்தை வேறு பக்கப் திருப்பி எங்காவது கடமையாற்றலாம் எனச் சென்றால் எனக்கென்ன கடமையிருக்கிறது? பெற்றோர்: பெற்றதன் கடமையைப் பின்னை தான் ஆற்றவேண்டுமென்பார்கள்! அந்தநிலையை எனக்குவழங்காமல் நாலைந்து மாதங்களிலேயே என்னை இவ்வுலகில் தவிக்கவிட்டுத் தாய் மறைந்தாள். நான் உழன்று உருக்குலைவேனென்பதை உணராத என் தந்தை, அன்னை சென்ற இடத்தை அடுத்த ஆறு திங்கள்களிலே சென்று அடுத்துவிட்டார். அப்போதே நானும் மடிந்திருக்கக்கூடாதா அல்லது எப்படி மடிவது என்கின்ற விதந்தான் அப்போது என் அறிவுக்குப் புலனாகியிருக்கக் கூடாதா?

அன்பு: புலனாகியிருந்தாலும் அந்த வேளையிலெல்லாம் நீ உன் உயிரைப் போக்கிக் கொள்ளத் துணிந்திருக்க மாட்டாய்! ஏனென்றால் மனித இனம் முதலில் தன் கண்ணில் காண்கின்ற பல வேறுபட்ட துன்ப இன்ப நிகழ்ச்சிகளைக் கண்டாலும், தான் அந்தத் தன்மையிலில்லாமல் தனித்தகைமையுடன் வாழலாமென்றுதான் கருதுகிறான். அல்லாமலும் துன்பத்தை அனுபவிப்பவர்களெல்லாம் அறியாமையாலும் இயலாமையாலுந்தான் அந்த நிலையிலிருக்கிறார்களென்றும், தான் தனது நாளிலே சிறிதும் அத்தகைய தன்மையை அடையாது வளர-வாழ முடியுமென்றும் முடிவு செய்து கொள்கிறான்! முயற்சியும் செய்கிறான். ஆனால் சமுதாயம் என்ற ஒன்று இருக்கும்வரை எதையும் சாதிக்க முடியாதென்பதை மறந்துவிடுகிறான். தனக்கொரு தோல்வி ஏற்படுகின்றபோதுதான் - தவிக்க நேர்கின்றபோதுதான் இதுபோன்ற சிந்தனை புறப்படுகின்றதே தவிர அதற்குமுன் இத்தகைய மனப்பான்மைக்கு இடமிருப்பதில்லை! இதுதான் இன்றைய சமுதாயத்தின் வழக்கம்.

ஆனந்: சமுதாயம்! சமுதாயம்! சமுதாயம்! சமுதாயத்தைப்பற்றி என்னிடம் பேசாதே! சமுதாயம் என்ற ஐந்தெழுத்துச் சொல்லைக் காட்டித் தான் எதற்கும் அஞ்சாத இதயம்படைத்தவனாக இருந்தாலுங்கூட அவனை இருந்த இடம் தெரியாமல் மறைக்கத்தக்க காரியங்களைச் செய்து வருகிறார்கள்! சமுதாயம்! அதன் பொருளென்ன? உருவமுண்டா? எப்படிப்பட்டது? அது ஒரு கழகமா-கல்லுருவா? இல்லையேல் வியத்தற்கரிய விஞ்ஞானப் படைப்பா? சமுதாயமாம்-மனிதன் தன் ஆதிக்கச் செயலை - அட்டூழியத்தை அநீதியை மறைக்க உபயோகித்துக்கொள்ளும் பயங்கரக் கருவி! அந்தச் சொல்லை எவன் கண்டுபிடித்தானோ அவனைப்போன்ற சுயநலமி-சூதுக்காரன் - பயங்கரவாதி, உலகமே மறக்க முடியாத முதல் விரோதி எவனுமே இருக்கமுடியாது. அந்தச் சொல்லின்கீழ் புதைபட்டோர் எத்தனையோபேர். இருந்தும் இந்த மந்தைக் கூட்டம் அதை மறந்து அதற்கு அடிபணிகிறது! உன்னையே நான் கேட்கிறேன், சமுதாயமென்றால் என்ன! உருவுடையதா? அஃறிணைப்பொருளா? மிருகமா? சமுதாயச் சட்டம்-சமுதாய வழக்கம் என்கிறீர்களே அதன் தலைவர்-கர்த்தா யார். அவருக்கு என்ன இலக்கணம் இருக்கவேண்டும்?

அன்பு: இவற்றை நீ எப்போது கேட்கிறாய்? உனக்கு இன்னல் வந்தபோது - இடையூறு நேர்ந்த சமயம்! உன் எண்ணம் கைகூடாது போன காரணத்தால். இவ்வாறு தனக்கென வரும் போதுமட்டும் அதுபற்றிச் சிந்தித்து, மற்ற நேரத்தில் அதைப்பற்றிய கவலையே அற்றிருக்கின்ற காரணத்தால் வளர்ந்ததுதானப்பா சமுதாயம்.

ஆனந்: தனக்கென நேர்கின்றபோதல்லாது ஏனைய நேரங்களில் ஏன் அதைப் பற்றிச் சிந்திக்கவேண்டும்?

அன்பு: வேண்டாம்! இப்போது உன்வரையில் ஏற்பட்ட தொல்லைக்காகத் துடியாய்த் துடிக்கிறாய். உன் வகை சரிசெய்யப்பட்டுவிட்டால் அதன்பிறகு இனியும் உன்னைப் போன்றவர்கள் உருவாகி வரக்கூடுமென்பதை உணர்ந்து அவர்களுக்கு உரியன செய்துவைப்போமேயென்று ஒருபோதும் எண்ணுவதில்லை. அப்படி இருந்துவிட்டவர்களின் செயல்களினாலே தானப்பா சமுதாயம் வளர்ந்தோங்கியிருக்கிறது. இப்போதுள்ள நிலையில் நீ சென்று சமுதாயத்தை எதிர்ப்பதாக இருந்தால் உனக்குள்ள தேவையைக் காரணமாகக் காட்டித் தான் குற்றம் சாட்டுவாய். ஆனால் சமுதாயத்தின்போக்குப்படி உன் எண்ணங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அதனால் உன்னைக் கேலி செய்வோரும் ஏளனம் செய்வோருந்தான் ஏராளம்! உனக்கோ இழிவை ஏற்றுக் கொள்ளும் தகைமை ஏற்பட முடியாது. ஆதலால் கோப மாய் ஆத்திரங்கொண்டு ஆர்ப்பரிப்பாய். உன் ஆர்ப் பாட்டமோ ஆங்காரமோ அந்த ஆணவக்காரரின் ஆதிக்கம் மிக்கோரின்முன் நீ ஒரு அணுவாகத்தான் தோற்றமளிப்பாய். ஆகவே அவர்கள் உன்மீது சுயநலத் திற்குப் பொதுநலம் பேசு வனென்ற குற்றச்சாட்டை மிகச் சுலபமாகக் கூறிவி முடியும். அவர்களை அடுத் துள்ள மக்கள்தானே அ

தம். அப்போது உன் நேர்மை-நாணயம்-பெருந்தன்மை பண்பாடு ஆகியவைகள் பழுதாக்கப்படும். பதைத பதைப்பாய் - பார்த்தோர் நகைப்பர். இதுதான் இதுவரைநடைபெறுவதும், இனி நடைபெறப்போவதும்.

ஆன: ஒருபோதுமில்லை! என் வரையிலேயே அதற்கு முற்றுப்புள்ளி வைப்பேன். இனி எஞ்சியிருப்போராவது - வருங்கால வழித்தோன்றல்களாவது தங்கள் பாதையிலே பழுதில்லாமல் பதைக்காமல் நடந்து செல்லட்டும் - கேடுகள்நேராமலிருக்கட்டும், நலம் நிலவட்டும் - நல்லது நடைபெறட்டும்.

அன்பு: என்று ஆசீர்வதிக்கலாம்! ஆனால் நீ கூறுகிறாயே வழித்தோன்றல்கள்! அவர்களே உனக்கு எதிரிகளாயமைவதாயிருந்தால் என்ன செய்வாய்? உண்மையை நன்றாகச்சீர்தூக்கிப் பார்ப்பாயேயானால் உன் புலம்பல்களாலும் ஆரவாரிப்பாலும் பயனில்லையென்பதைத் தெளிவாகத்தெரிந்துகொள்வாய்! ஒருவர் தயவை ஒருவர் எதிர்பார்த்து-பிற்கால நிகழ்ச்சிகளுக்கும் இன்றைய நிலவரங்களுக்கும் தொடர்பு படுத்திக்கொண்டு அர்த்தமற்ற முறையில் அடுத்தவருக்கு அடிபணிவோர் பலர். அவர்கள் அடங்கி நடப்பதற்குக் காரணம் 'தன்னளவில் இனி வரப்போகும் நிகழ்ச்சிக்கு எதுவும் இடர்ப்பாடு இருக்கக்கூடாது' என்பதேயாகும். உதாரணமாக: ஒருவன் ஒரு நிலத்தையோ-அல்லது நிதியையோ - இல்லையேல் உன்னைப்போல் காதலையோ பெற விரும்புகிறானென்று வைத்துக்கொள். அவன் தான் நினைத்தது நடைபெற வேண்டி அதற்குரியவர்களென்று கருதுவோரைப் பின்பற்றியே நிற்பான், அவர்கள் போக்கை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் எதிர்ப்பைக் காட்டமாட்டான். ஆனால் அவர்களா விட்டுவிடுவார்கள்! அவர்களுக்குத்தெரியும் அவன் தங்களுக்கு எதிரியாகமாட்டானென்று. ஆகையால் அவனை இழுத்துவந்தே உனக்கு எதிர்நிறுத்துவார்கள்! அவனும் மறுமொழி கூறுதவனாய் வந்துநிற்பான். இவ்விதம் அகப்பட்டுக்கொள்பவர்களில் பெரும்பாலோர் உன் வகையைச்சேர்ந்தவர்கள்தான். இதனால் அவ்விதம் பின்பற்றிச் செல்வோரின் எண்ணமாவது ஈடேறிவிடுமென்று கருதுகிறாயா? இல்லவே இல்லை! அப்படி ஈடேற விட்டுவிட்டால் அவர்கள் ஆதிக்கம் எப்படி நிலைத்து நிற்கும்? காதலுக்காக எதையும் செய்யச் சித்தமாயிருப்பவர்கள் சிறிதுகாலம் ஒருவருக்கு ஒப்பம் போட்டுக்கொண்டிருக்கத்தானா தயங்குவார்கள். எனவே "தம்பி! நான் உன் நிலைமையை உணர்கிறேன். என்றாலும் (ஒருவரைக் குறிப்பிட்டு) அவர் இதில் தலைகொடுப்பார் போலிருக்கிறதே! அவர் வந்தால் நான் ஒன்றும் செய்வதற்கில்லை! என்ன செய்யலாம் - விதி எப்படியிருக்கிறதோ அப்படியாகட்டும்" என்று கூறிவிடுவார். இயல்பாகப் பார்க்கப்போனால் இவனிடம் பேசிக் கொண்டிருக்கின்றவரால் உருவாக்கப்பட்டவரே அந்தஅவர். அதுவரை இவனிடம் கேட்டுத் தெரிந்துகொண்ட செய்திகளெல்லாம் முற்றுப்புள்ளி-அரைப்புள்ளி பிசகாமல் அவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கும். அதுமட்டுமல்ல "நீங்கள் உங்களுக்குத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளவேண்டாம். பிறகு பயல் உஷாராகிவிடுவான்" என்ற முறையில் எச்சரிக்கையும் தரப்பட்டிருக்கும். அந்த 'அவர்' பற்றிய செய்தியும் இவனுக்கு இறுதி நேரத்தில் தான் அறிவிக்கப்படும். இல்லையேல் இவன் அவர் கருதியபடி விழிப்புக் கொண்டுவிடுவானே! இப்படியேதான் ஆண்டு பலவாகநடைபெற்றுவருகிறது. நம்பி மோசம்போன வாலிபர்கள் உண்மையை உணர முடியாமல் தனக்கென வரும் வரையில் அடுத்தவனைக் கேலி செய்கிறார்கள். தன் முறை வந்தவுடன் தவிப்புக் கொள்கிறார்கள். இல்லையேல் உன்னைப்போல் தண்டமுறையைக் கையாளத் தொடங்குகிறார்கள். முடிவு, எதிர்பார்ப்பதுபோல்எல்லா வகையிலும் வெற்றி கிடைப்பதில்லை. இதுதானப்பா சமுதாயத்தின் வழக்கமும் நடைமுறைகளும். இதிலே உன்சார்புக்கு ஆள்தேடுவது கரும்புக் கொல்லை காவலுக்கு யானையைஉருவத்தை நினைத்துத் தேர்ந்தெடுப்பது போலத்தான். இவர்கள் இனியும் வாழ்ந்துகொண்டிருப்பார்கள்! இல்லையென்றால் இன்றைய பிறநாடுகளின் விழிப்பு நம் நாட்டின் பெருவாரியான முன்னேற்றம் எவ்வாறிருந்துகொண்டிருக்கிறது, இந்த வேளையிலும் பழமையையும் - மடமையையும் எதிர்ப்பதை மறுக்க வகையற்றுப் போனாலும் அவர்கள்செயலை நிறுத்தாது செய்துகொண்டே வருவார்களா? அவர்களைத் தடுப்பாரில்லை! தடுத்தால் தன்வாழ்வு என்னாகும் என்ற நிலை. இன்று இந்த ஊரிலே ஒரு பகுத்தறிவுக் கழகம் திறக்கப்போவதாக இருந்தால், நேற்றே இவ்வூரில் ஒரு புதுக் கோயில் துவக்கப்பட்டிருக்கும். உன் கழகத்துக்கும் அவர்கள் கோயிலுக்கும் நடைமுறைகளைப் பார்த்தால் உன்னால் நிச்சயம் போட்டி போட முடியாது. அவ்வளவு திரள் - அத்தனை ஆடம்பரம். நீயே கூடக் கண்டு மலைத்துப் போவாய். தவறோ-காரணமோ அவர்களுடையதல்ல, அவர்களுமல்ல! பகுத்தறிவு பரவி மக்கள் அதைப் பின்பற்றிவிட்டால் தங்கள் வாழ்வு கெடும் என்கின்ற தன்னலக்காரர்களின் செயலால், அதேபோல இவர்களும் இளைஞர்களின் விருப்பத்தால் தன் பெருமை குன்றிவிடுமென்ற எண்ணங்கொண்டே அவ்வாறு செய்கிறார்கள். மற்றுமொரு விசித்திர மென்னவென்றால் எதிர்ப்போரை எதிர்க்கத் திறமற்றது நீ கூறுகின்ற சமுதாயம்!

ஆன: எத்தனைபேர் அழிந்திருக்கிறார்கள்?

அன்: அவர்கள் எதிர்ப்பு வலிமையற்றது.

ஆன: ஆனவரை எதிர்த்துப் பார்த்துத்தான் இறுதியில் வீழ்ந்திருக்கிறார்கள்.

அன்: பொருளென்ன 'திறமைக்குறைவு' என்பது தானே! நீ நாளையே சமுதாயத்தை எதிர்பார்க்காமல் உன் வேலையைத் தொடங்கு!

ஆன: வாழ விடமாட்டார்களே!

அன்: அவர்களேன் உன்னை வாழவிடவேண்டும்? உன் வாழ்வு அவர்களை எதிர்பார்த்தாயிருக்கிறது?

ஆன: இல்லை!

அன்: இல்லையல்லவா? பின் ஏன் தயக்கம்!

ஆன: யாரும் உதவமாட்டார்கள்,

அன்: பார்த்தாயா! அந்த யாரிலும் உன்னவர்களென்று ஒருவருமிருக்கமாட்டார்களா?

ஆன: இருக்கிறார்கள்! அவர்களும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுவிட்டால்?

அன்: அதுவேதான். இப்போது சொல் சமுதாயம் எப்படிச் செயலாற்றுகிறதென்று! உன்னவர்களென்று இருப்பவர்களே, ஏதோ ஒன்றுக்காக உன் நட்பின் தகைமையையும் நிலைமையையும் பொருட்படுத்தாமல் இருந்துவிடுகிறார்களென்பதை உணருகிறாயல்லவா? நன்கு தெரிந்துகொள்! எதற்கும் எவர் தயவையும் நாடாத தன்மையுள்ள ஒருவனை சமுதாயம் எதுவும் செய்ய இயலாதென்பதையும் தெரிந்துகொள்! ஆகவே முதலில் பிறரை நாடுவதை விடு. தன் நிலைமையைச் சரிசெய்துகொள், பின் செயலாற்று. அப்போது இதே சமுதாயம்

இந்தி வேண்டாம்!

எங்கிருந்து வந்ததிந்த இந்தி?—தமிழ்
எழிற்பூவைச் சிதைக்கவந்த மந்தி.
தங்கியிவண் ஆளவெழின் இந்தி—நாங்கள்
தடுக்காமல் ஏனிருப்போம் பிந்தி?
மங்குவதோ எம்தமிழும் இங்கே—இந்தி
மணிமகுடம் சூடுவதும் எங்கே?
சிங்கமொழி எம்தமிழை மிஞ்சி—இந்தி
சிதைக்கவரின் ஏன் இருப்போம் அஞ்சி?

ஞாலமிசை பிறமொழிகள் மீறி—அன்னைப்
பாலமுதைக் கெடுக்கவரின் வாரி
சூலமொடு நாம்எழுவோம் சீறி—அவற்றைச்
சூறையிடு வோம்வெறியில் ஊறி.
சால,பல அயல்மொழிகள் கற்போம்—அவற்றைச்
சளைக்காமல் வரவேற்றும் நிற்போம்.
மூலஉயிர் பற்றவரின் தூர்ப்போம்—இந்தி
மூர்க்கமுடன் ஏன்நுழையும் பார்ப்போம்!

உமிழ்கின்ற தீமைகள் நெஞ்சு—இந்தி
உணராமல் வந்தணையும் பஞ்சு.
உமியாக்கிப் புயற்காற்றில் விடுப்போம்—இந்தி
உருவற்றுப் போகஉயிர் எடுப்போம்.
தமிழெங்கள் மூச்சென்று சொல்வோம்—இந்தி
தருக்கிவரின் எதிர்த்ததனை வெல்வோம்.
தமிழெங்கள் வாழ்வென்று ஏற்றோம்—இந்தி
தடையாக வருமென்றால் ஆற்றோம்!

இரா. வேங்கடபதி.

உனக்குத் துணைநிற்கும். அத்துடன் அமைந்துவிடாதே! உன்ஆட்சி வரும்போது முன்னர் கூறினையே வழித்தோன்றல்களுக்கு இதம் செய்து தரவேண்டுமென்று! அதைச் செய். அதுவன்றி இப்போது உன் முயற்சி,சினிமாக்கொட்டகையின்பக்கம் சென்று நின்று, கடன்வாங்கி சினிமா பார்க்கலாம் என்று முடிவு செய்வது போலதான். சினிமா பார்க்க வந்திருப்பவன் அடுத்தவனுக்குக் காசு கடன் கொடுத்து அழைத்துக் கொண்டுபோகிற அளவுக்கா வந்திருப்பான். தன் வரையிலும் செலவு உள்பட கையிலே கொண்டு வந்திருப்பான். ஏதோ ஒரு சிலர் வேண்டுமாயின் பெரும் பணத்துடன் வந்திருக்கக் கூடும். அவர்களும் கடன் கேட்போருக்குக் கொடுக்கும் எண்ணத்துடன் வந்திருக்க மாட்டார்கள்' அதே போலத்தான் உன் வரையில் துணையாக்கிக் கொள்ளலாமென்று நீ கருதிக் கொண்டிருக்கிறாயே அவர்களும்; அவர்களைச் சார்ந்தோரும்.

ஆன : அப்படியானால் என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்?

அன்: என்ன செய்யச் சொல்கிறேனா? 'சமுதாயம் என்ற நினைவையே அகற்றிவிட்டு உன கருத்திலே பட்டதைச் செயலிலே நிலை நாட்டத் துணிந்துவிடு' என்றுதான் சொல்கிறேன். ஆதரவு நானிருக்கிறேனென்ற நம்பிக்கையும் உனக்கு ஊட்டுகிறேன்.

ஆன : அப்படியே செய்கிறேன்.

அன் : சொல்லாதே! செய்.

இவ்வாறு வழி காட்டியனுப்பினான் அன்புசாமி!

ஆனந்தன் ஒரு பஸ் கண்டக்டர். நேர்மை-நாணயம்-பண்பு ஆகியவற்றில் சிறந்து விளங்குவன். அவன் பஸ்ஸில் நாடோறும் செல்கின்ற ஒரு பெண்மணி அன்று வண்டியிலே ஏறிவிட்டாள்! ஆனால் டிக்கட்டுக்குக் காசில்லாமல் தவிக்கிறாள் என்பது கண்டக்டருக்கு மட்டுந்தான் தெரியும். அவளது நிலையில் அவளுக்காக எத்தனையோ இளைஞர்கள் கூட காசு கொடுக்க முன் வருவர். ஏனெனில் இளம் பருவம், எழில் மேனி நிமிர்ந்த பார்வை. எவர்தான் ஏற்றுக் கொள்ள மாட்டார்! ஆனால் அவளோ ஏழை யென்பதை உடை காட்டிற்று. மானத்தால் நாணப்பட்டு உயிர் குனமல் குன்றி நிற்கிறாள் என்று படிப்பின்பால் கொண்ட நாட்டத்தின் காரணமாகவோ என்னவோ சிந்தனையிலாழ்ந்த படியே கால்கள் வழிநடக்க பஸ் நிலையத்திற்கு வந்து, குறிப்பிட்ட நேரம் வரை நினையாமல் அப்போது நினைத்துத் தவித்தவள் போல்தான் காணப்பட்டாள். ஏனென்றால் கண்டெக்டர் கேட்டபோது ('எக்ஸ்கியூஸ் மி') மன்னித்துவிடுங்கள் நான் இங்கேயே இறங்கிவிடுகிறேனென்றாள். அவள் நிலைமையைப் புரிந்துகொண்ட கண்டெக்டர் ஒரு டிக்கட்டைக் கிழித்து அவளிடம் கொடுத்து "பரவாயில்லை" என்று கூறிவிட்டுச் சென்றான். இந்த நிலை-நினைப்பு-நிகழ்ச்சி பெரும்பாலும் பிறர் அறிந்து கொள்ள முடியாமல் அரை நொடியில் நடந்தது,

மாலையில் கல்லூரி விட்டு வரும்பொழுது, காலையில் தான் வந்த பஸ் வரும் வரை காத்திருந்தாள்! வந்ததும் ஏறிக் கொண்டு காலை வாங்கிய டிக்கட்டுக் குரிய பணத்தையும் கொடுத்தாள். "ஏது பணம்" என்று கேட்பது போல் அவளைப் பார்த்துவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டான். அவளும் பஸ் சென்று சேரும் இடம் வரை வரவேண்டும். அங்கு வந்து அவள் இறங்கியதும் கண்டெக்டர் அவளை அழைத்துப் பணம் ஏது என்பதை விசாரித்தபோது, அவள் தன் தோழியிடம் கடன் வாங்கியதாகக் கூறினாள். அப்போது அவன் "நீயேன் கடன் வாங்கினாய்? உன்னையும் உன் நிலையையும் நன்றாக அறிந்தே நான் டிக்கட்டைக் கொடுத்தேன். உன் நேர்மை எண்ணத்திற்காக உன்னைப் பாராட்டுகிறேன். இந்த பஸ்ஸுக்கு ஆகிற செலவைக்கூட வாடிக்கையாக எடுத்து வரவோ கொடுத்தனுப்பவோ கூடிய நிலையில் நீ இல்லை யென்பதை உணர்கிறேன். இந்தநிலையில் நீ இப்போது கடன் வாங்கியுள்ளதைத் திரும்பத் தரவும், நாளைய பஸ் சார்ஜுக்குரிய பணத்தையும் ஒருங்கே பெற வாய்ப்பு உனக்கேது. இதோ இந்தப் பணத்தையும் எடுத்துப் போ, இனிநீ பஸ்ஸுக்குக் காசு தயாரித்துக் கொண்டு வர வேண்டாம். நானே தருகிறேனென்று கூறி, தன் முறை மாற்றப்பட்டாலுங் கூட அவளுக்கு போக்குவரவுக்குரிய வகைகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருந்தான்.

அவனும் ஏழைதான், முதலில் இரக்கம் பின்னர் காதலாக மாறியது. அவளுக்கும் அவன் மீது அன்பு இருந்தது. ஆனால் இருவர் நடை முறைகளையும் எவனோ ஒருவன் தப்பாகக் கணக்கிட்டுக் கம்பெனியாருக்குத் தெரிவித்து விட்டான். அதன் பயன் "தற்காலிக வேலை நிறுத்தம்-நேரடி விசாரணை" இவைகளைத் தந்தது.

விசாரணையின் போது, தன் வரையில் "தவறல்ல" என்று கொண்டிருந்த எண்ணத்தால் கம்பெனியாரின் கேள்விக்கு ஆணித்தரமான பதிலளித்தான்.

"ஆனந்தா! நீ வேலை பார்த்து வரும் பகுதியில் பிரயாணம் செய்யும் பெண்களிடம் நீ தகாத முறையில் நடந்து கொள்ளுகிறாய் என்பதும் — அதற்கு அத்தாட்சியாக நீ ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டுள்ள செய்திகள்பற்றி நீ மறுப்பு கூற முடியுமா?!" என்றும் கேட்டனர்.

"மறுத்துக் கூற முடியும்! பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொண்டேனென்று கூறுவதை மறுக்கிறேன்"

"ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டுள்ளாயென்பதையும், அவள் அந்த வழியில் பிரயாணம் செய்து வருபவள்தானென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறாயல்லவா? இது உன் சொந்த சம்பந்தப்பட்டவையாயிருக்கலாம். ஆனாலும் உன் அலுவல் சம்பந்தப்பட்ட நேரத்தையும் உன் அலுவலின் முக்கியத்தையும் இதில் பிணைக்கிறாயன்பதே இங்கு குறிப்பிடுவது. உன் அலுவல் டிக்கட் கொடுத்துப் பணம் வாங்குதல். நீயோ பணம் வாங்காமல் டிக்கட் தருகிறாய், ஆனால் எப்படியும் பணத்தைக் கணக்கு ஒப்படைத்து விடுகிறாய் என்னும் சமாதானம் பொருந்தாது. உன் கடமையில் நீ பிழை செய்தாய் என்றே கருதப்படும். நியாய வாதத்துக்காக எடுத்துக் கொள்வதானால் வேண்டிய நபரென்பதற்காக டிக்கட்டைக் கொடுத்ததுபோல் பணத்தையும் கொடுப்பாயேயானால் உன் மீது குற்றம் சாட்டுவதற்குரிய நேரத்தைவிட அதை நிரூபிப்பதற்கும் மேலும் அதில் என்னென்ன நடைமுறைகள் கையாளப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டுபிடிப்பதற்கும் கம்பெனி அதிகக் காலவிரையம் செய்ய வேண்டிவரும். இதனால் கம்பெனியின் அலுவலை அலைக்கழியச் செய்வதற்கு நீ காரணமாக இருந்தாயென்றுகூடக் குற்றஞ் சாட்டப்படலாம். அல்லது இது போன்ற நிலைக்கு இன்னொருவன் ஆட்பட நீ வழிகாட்டியாக இருந்தாயென்றும் குறிப்பிடலாம். அதுவெல்லாம் இல்லாமல் உன்னை மன்னிக்கப்படுகிறது. ஆகவே இனி இவ்வாறு நடந்துகொள்ள மாட்டேனென்றும் அந்தப் பெண்ணுடன் தொடர்பு கொள்வதில்லை யென்றும் எழுதிக்கொடுத்து விட்டு அலுவலைச் சென்று ஏற்றுக்கொள்ளலாம்"

"நான் இனி அம்மாதிரி நடப்பதில்லை என்று கூறினால் இதற்கு முன் அவ்விதம் நடந்ததாக நானே ஒப்புக்கொள்வதாகும். அது நீங்க, அந்தப் பெண்ணின் தொடர்பு கொள்வதில்லை யென்றும் எழுதித் தர இயலாது"

இவ்வாறு கூறிவிட்ட காரணத்தால் அலுவலிருந்து நீக்கப்பட்டான்! அத்துடன் அவள் கல்லூரிக்குச் செல்வது தடைபடக்கூடாதென்கிற காரணத்தால்தன் நண்பன் ஒருவனின் டாக்ஸியில் தினம் வேலை செய்தான் அதற்காக உரிய கூலிக்குப்பதிலாக அவளைக் கல்லூரியிலேயே சென்று விட்டு வரும்பொறுப்பை அவனுக்குக் கொடுத்தான். ஆனந்தனிடம் நல்ல நம்பிக்கையும் அன்பும் கொண்ட அந்த டிரைவர் அதனைச் செயலாற்றி வந்தான். தினமும் டாக்ஸியிலேயே கல்லூரிக்குச் செல்வதும், கல்லூரியிலிருந்து திரும்பி வருவதுமாக இருந்தாள்.

அப்படிச் சென்று திரும்புவதால் அவள் நிலைஉயர்வாகத் தென்பட்டது. அது வேறொருவன் உள்ளத்தில் வேறு விதமான எண்ணத்தைக் கிளறிவிட்டது. பணம் படைத்த ஒருவன் பார்வையில் அந்தப் பாவை பட்டாள். அவளைக் கைப்பற்றும் முயற்சியில் அவன் ஈடுபட்டான். அவன் எண்ணம் செயலாக உருப் பெற்றது.

ஒரு நாள் அவளுக்காக வருகின்ற டாக்ஸியை இடைமறித்து அழைத்துக்கொண்டு போக ஏற்பாடு செய்தான். டாக்ஸிகாரன் தான் வரமுடியாதென்று கூற இயலாதே! எனவே சென்றுவிட்டான்! சென்று வழியில் மிஷின்பழுதுபட்டுவிட்டதாகக் கூறி, ஏறி வந்தவனை வேறு டாக்ஸியில் அனுப்பி விட்டுத் தன்கடமைக்காக விரைந்து வந்தான். அதற்குள் அவள்போயிருப்பதையறிந்து அங்கிருந்த அவள் தோழியர்களிடம் வழிவகையைக்கேட்டறிந்து அவளிருக்கும் இடத்தைச் சென்றடைந்தான். அங்கே கொடுமைக்கு ஆளாக இருந்த அவளை மீட்டு வந்துகொண்டிருந்தான்.

இன்றைய இடைவேளையில் தான் ஆனந்தனுடன் அன்புசாமியும் பேசிக்கொண்டிருந்தது. பேச்சு முடிந்த பின்னர் நேரே அவளுக்குக் கல்லூரி வாழ்வை வழங்கிக் கொண்டிருக்கும் வயோதிகர் வீட்டை நாடிச்சென்றான் ஆனந்தன். அந்தக் கிழப்புலியோ இந்த இளமானைப் புசிப்பதற்காக ஒவ்வொரு நாளும் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. ஆம்! அவளைத்தனது இச்சைக்குகந்த பச்சைக்கிளியாக்கிக் கொள்ளலாமென்றுதான் படிக்கவைப்பதுபோல் தன் தருமச் சொத்தில் குறிப்பிட்டு விட்டார். அவளோ சந்தடி அடங்கும் வரை தூங்கி, சந்தடியடங்கியபின் விழித்திருந்து, காலையில் வீட்டு வேலைக்காரர்கள் வந்தபின் தூங்கிப்பின் எழுவதுமாக இரவுப் பொழுதைக் கழித்து வந்தாள். தனக்கேற்பட்ட தோல்விகளைக் கொண்டு படிப்பை நிறுத்தி இருப்பார். அப்படி செய்யப்பட்டதன் பலன் தான் அவள் பஸ் சார்ஜுக்குத் திண்டாடியது. படிப்பில் பழுதேற்பட்டாலல்லாமல் கல்லூரி தடைப்படாது. இது தர்மசாசன அமைப்பு! நன்கு படித்துத்தேறி வரும் வரை அவள் படித்துக் கொண்டே இருக்கலாம். அதைத் தடுக்க முடியவில்லையேயென்று தவித்

அலட்சியப்படுத்தி ஒதுக்கித் தள்ளினர், ஆதரவு தரவே கூடாது என்று எண்ணினர், தீண்டினால் திருநீலகண்டம் என்று நினைத்து நம்மைத் திரும்பிப் பார்க்க மறுத்தனர், நம்மோடு பேசுவது, பழகுவது, நாம் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளிலே பங்கேற்பது எல்லாம பஞ்சமாபாதகங்களைச் சார்ந்தவை என்று கருதினர், வசை மொழிகளை வீசினர், துப்பாக்கியையும் அடக்கு முறைகளையும் துணைக்கழைத்துப் பார்த்தனர், எப்படியும இந்தத் தேர்தலிலே சமாதி கட்டிவிடுவது என்று திட்டமிட்டு செயலாற்றினர். ஆனால் அவர்களுடைய ஆசைகள் அத்தனையும் சுடு மணலில் பாய்ச்சிய குளிர்நீராய் மறைந்து விட்டன. முடிவு, நம்மால் அனுதாபம் தெரிவிக்கப்பட வேண்டிய நிலையிலே அவர்கள், அவர்களால் வியந்து வெட்கத்தை துறந்து பாராட்டப்பட வேண்டிய நிலையிலே நாம் வளர்கிறோம், வளர்ந்து கொண்டேயிருக்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் 'மாற்றான் வீட்டு மல்லிகை மலர் மணம் வீசுகிறதே, அந்த மணத்தைக் கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மலர் வனத்தினுள் மலத்தை வாரிவீசினானும் ஒரு புத்திசாலி. மலர்ச்செடி அந்த மலத்தை எருவாக்கிக்கொண்டு முன்னிலும் பன்மடங்கு பொலிவோடு வளர்ந்து மணம் நிறைந்த மலர்களை மேலும் தந்தது' என்று குறிப்பிட்டது போல கேலிகளையும் கிண்டல்களையும், அலட்சியங்களையும் அடக்கு முறைகளையும், எதிர்ப்புகளையும் ஏச்சுகளையும் நல்ல உரமாகக் கொண்ட நமது கொள்கை படர்ந்து விரிந்த ஆலமரமாக இன்று வளர்ந்திருக்கிறது. நேர் முகமாகவும், மறைமுகமாகவும் யார் யாரெல்லாமோ இன்று நம் கொள்கைக்கு ஆதரவாகவும், நாம் படும் இன்னல்களுக்கு அனு

துக் கொண்டிருக்கும் முதியவர் முன்னே ஆனந்தன் நின்றான். அந்த அநாதைக்கும் அன்னக்காவடியான தனக்கும் வாழ்வு வேண்டும் நாங்கள் வாழவேண்டுமென்று கேட்டு நின்றான். வெகு நேர விவாதத்திற்குப் பிறகு முதியவரால் அவர்களுக்கு வாழ்வு வழங்கப்பட்டது. அந்த நேரத்தில் கயவனிடமிருந்து காப்பாற்றப்பட்ட காரிகை அங்கே வந்து சேர்ந்தாள். கனிச்சாறும் தேனும் கலந்து ஊட்டப்பட்டது போலிருந்தது அவள் கேட்ட செய்தி. திருந்திய பெரியவர் அவர்களை வாழ வேண்டுமென வாழ்த்தினர் ஆனந்தன் அன்புச்சாமி வாழ வேண்டுமென வாழ்த்தினான்! கொடியவனிடமிருந்து காப்பாற்றிய டிரைவரை வாழ வேண்டுமென அவள் வாழ்த்தினாள். இவர் போன்றோருக்கு வழிகாட்டியாக இவர்கள் வாழ வேண்டுமென நான் வாழ்த்துகிறேன். ○

காலம் கனிகிறது, கடமை வளருகிறது!

—(0)—

(நாஞ்சில் செ. அன்பெழில்)

தாபம் தெரிவித்தும் பேசி வருகின்றனர். இவை யெல்லாம் காலம் கனிகிறது என்பதையும் நம்மால் செய்து முடிக்கப்பட வேண்டிய கடமை வளர்கிறது என்பதையும், கண்ணியமும் கட்டுப்பாடும் முன்னிலும் பன்மடங்கு நமக்குத் தேவை என்பதையும் வலியுறுத்துகின்றன.

ஆனந்த விகடனின் 'வருக அண்ணாத்துரை,' 'நெஞ்சு பொறுக்குதில்லையே' கட்டுரைகளும், கல்கியின் 'திராவிடத்தைக் காப்போம்' என்ற தலையங்கமும், சுதேசமித்திரன் அவ்வப்பொழுது வெளியிடும் தென்னாட்டின் இழிநிலை குறித்த கேலிப் படங்களும். சுதந்திராவில் மாநில அமைச்சு மத்திய அரசிடம் அடிமைப்பட்டிருக்கும் நிலையைக் குறித்து திரு. ஆச்சாரியார் தீட்டிய கட்டுரையும், பொருளாதார விற்பன்னர்களின் சொற் பொழிவுகளும்' 'திராவிடம் தனி நாடு' என்ற நமது இதய கீதத்திற்கு பக்க மேளங்களாக அமைகின்றன. இசை. சுவையானது தான், எனினும் பக்க மேளங்கள் பாராட்டுகின்ற அளவிற்கு இதுகாறும் அமையவில்லை. எனவே மக்களும் செவி மடுக்க தயங்கினர் இப்பொழுது பலராலும் பராட்டப்படுகின்ற புகழ் சான்ற பக்கமேளக்காரர்களால் நம் இதயகீதத்திலே புதிய சுவையும், கேட்பவர்களிடம் பேரார்வமும் காணப்படுகிறது.

நமதுஉரிமைக்குரல்வளர்ந்து வருவது தெரிந்த வடநாட்டு தலைவர்கள் எங்கும் எப்பொழுதும் நம்மைப்பற்றிப் பேசுவதையேகுறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர். நம் இயக்க வீரர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் பாராளுமன்றத்திலே எழுப்பிய குரல், வடநாட்டு தலைவர்கள் பலரை மருளவைத்திருக்கிறது அண்மையில் மைசூரில் நடைபெற்ற நிலக்கொடை இயக்க விழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்த நேருபண்டிதர் இராமகிருட்டின மடாலயத்தாரால் நடத்தப்பட்டசில நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டுள்ளார். அப்போது :பன்னிப் பன்னி இந்திய ஒற்றுமைகுறித்தும் இமயம் முதல் குமரிவரை ஒரே நாடு என்றும், மொழி இன மனப்பான்மைகளை விட்டொழிக்க வேண்டுமென்றும் இதோபதேசம் புரிந்துள்ளார். அதுபோலவே முன்னால் அமைச்சர் முன்சி அவர்கள் ஒரு பொதுகூட்டத்தில் பேசுகின்ற பொழுதும் இந்திய ஒற்றுமைப்பண்பாடி, பிரிந்து போவதோ, தனித்து வாழ்வதோ தீது என்று எடுத்துக் கூறி கூடிவாழவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறார். தீண்டினால் திருநீலகண்டம் என்று எண்ணியிருந்த அவர்கள் இன்று கனவிலும், நனவிலும் நம்மைப்பற்றி சிந்தித்துத் தீரவேண்டிய கட்டாய நிலைக்கு வந்து விட்டனர். சென்ற திங்கள் இறுதியில் மதுரையில் கூட்டிய காங்கிரஸ் சீர்திருத்தக் குழுவினர் தங்கள் கட்சிக்கு புதுப்பொலிவும், வலிவும்,பெயரும்தந்ததோடு டில்லியிடமிருக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்பதையும் வற்புறுத்தியுள்ளனர். அதிலேயே நாட்டுப் பிரிவினை தங்கள் குறிக்கோளல்ல என்று காட்டிக்கொண்டபோதிலும் தம்மை மறந்து டில்லி ஓரவஞ்சனை செய்கிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

"உங்கள் உணவுப்பிரச்சினையை உங்கள் மண்டலத்துக்குள்ளேயே தீர்த்துக்கொள்ளுங்கள்", என்பது விபரீதமான உதாரணம். மத்திய அரசாங்கத்தின் தலைமையில் நம்பிக்கை கொண்டிருக்கும் இராச்சியங்களுக்கு இது ஏற்ற வழிகாட்டுவதாகாது. 'எல்லாவற்றையும் நாங்களே தீர்த்துக் கொள்ளுகிறோம், விட்டுவிடுங்கள்', என்று சிலர் சொல்லத் தொடங்கலாமல்லவா? டில்லிக்கு நல்லதா அது?" என்று கேள்வி கிளப்பியிருக்கிறது 20-9-1957 குமுதம் இதழ்.

இலட்சுமிபுரம் இளைஞர் மன்றத்தில் 30-9-'57-ல் சொற்பொழிவாற்றுகின்றபோது உத்திர பிரதேச ஆளுநர் திரு. வி. வி. கிரி அவர்கள் "நான் ஒரு சென்னைவாசி. நான் சென்னைக்காகவே வாழ்வேன். சென்னைக்காகவே சாவேன். சென்னையிலிருந்து எனக்குக் கிடைக்கப் பெற்ற அறிவு, பண்பு, கல்வி, உணர்வு ஏராளம். நான் என்றும் சென்னைக்கு கடமைப்பட்டுள்ளேன்" என்று சென்னைக்குப் புகழ் பாடிவிட்டு, 'அதிவிரைவில் தென்னாட்டு மக்கள் தங்களிடையே நிலவும் சின்னஞ் சிறு வேற்றுமைகளை தகராறுகளை மறந்து, பிரிந்து பிரிந்து வாழுகின்ற நிலையையும் விட்டு தென்னாடு முழுவதும் ஒரே உருப்பெறுகின்ற வகையில் பாடுபடுவார்கள், பணிபுரிய வேண்டும்" என்று தன் உள்ளத்தைத் திறந்து பேசியுள்ளார். ஒன்றிய தென்னகத்தை உருவாக்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள திரு. கிரி முன்பொருமுறை டில்லி அமைச்சர்களுக்கு கறுப்புக் கொடி காட்டுவதென்று நாம் முடிவெடுத்து கறுப்புக்கொடி காட்டியபோது 'நானும் ஒரு தென்னாட்டான்,தானே' என்று தன்னையுணர்ந்து பேசியவர் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. அவர் இப்பொழுது தென்னகத்தில் பிரிந்து வாழும் தமிழரும் கன்னடியரும், ஆந்திரரும் கேரளரும் இணைந்து ஒரு நாட்டினராய் வாழவேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளது நாம் மகிழ்ந்து வரவேற்பதற்குரியது,

காடுகளிலும் மலைகளிலும் ஒளிந்து கொண்டு அசாம் மாநில அரசையும், டில்லி பேரரசையும்'ஆடவைத்த நாகர்கள் நேருபண்டிதரை டில்லியில் சந்தித்து தாங்கள் இனத்தாலும் மொழியாலும், கலையாலும் தனி என்பதை எடுத்துக் கூறி, தாங்கள்யாருக்கும் எப்பொழுதும் அடிமையாக வாழ்ந்ததில்லை என்றும் எடுத்துச் சொல்லி தனிநாடு தேவை என்பதை வற்புறுத்தியுள்ளார்கள். நாகர்களின் உரிமைமுழக்கம் திரைகடலுக்கப்பால் வெளிநாடுகளிலும் கேட்கத்துவங்கிற்று. அமெரிக்கா ஏடுகள் விடுதலைகோறும் நாகநாட்டினர்களின் கலை பண்பாடு குறித்து கட்டுரைகள் எழுதின. பண்டிதர் நேருவின் அகில உலகப் புகழென்னும் திரையே அசாம் காடுகளில் முழங்கப்படும் துப்பாக்கி முழக்கமோ அவர்கள் எழுச்சிக் குரலைத் தடுக்க வில்லை இப்பொழுது அவர்களுடையநாகநாடு 'டில்லி பேரரசின் கீழ் தனிநாடு' என்ற வகையில் அமைத்துக்கொள்ள அலகாபாத் வீரர் உரிமை தந்துள்ளார் 'டில்லியின் கீழ்' என்ற 'வால்' அறுவதற்கு எவ்வளவு நேரமாகும்?. இந்த அணுயுகத்தில் பாகித்தான் என்று ஒரு நாடு கிடையாது என்று உதறி அடித்துப் பேசிய அதே நேரு பாகித்தான் தனியரசுக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பியதைப் பார்த்தோம் மொழிவழி மாநிலங்கள் அமையாது என்று அழுத்தந்திருத்தமாகப் பேசிய மோதிலால் மைந்தர் பொட்டி சீராமுலுவின் பிணத்தின்மேல் நின்று கொண்டு ஆந்திர மாநிலத்தை உருவாக்கித்தந்த காட்சியையும் கண்டோம். அடக்கு முறையாலும் ஆகாத வார்த்தைகளாலும் அழித்து விடலாம் என்று கருதப்பட்ட நாகர்கள் இன்று தமக்கு ஒரு மாநிலம் தனியாகப் பெறுகின்றார்கள். முடிசூடா மன்னன் அந்த விழாவுக்கு மோகன கீதம் பாடுகிறார். 'வானமே இடிந்து விழுந்தாலும் தனிநாடு இல்லை' என்று கூறி 'நான்சென்ஸ்' அநாகரீகப் 'காட்டுமிராண்டித்தனம்' என்ற வார்த்தைகளால் அர்ச்சனை புரிந்த பண்டிதர் திராவிட தனியரசுக்கு வாழ்த்து செய்தி அனுப்பும் நாள் வெகு தூரத்தில் இல்லை. சோசியலிஸ்ட் கட்சியின் கொள்கை நிர்ணயக்குழு உறுப்பினரான திரு. மகாதேவசிங் என்பார்

12-9-1957-ல் குடந்தையில் ...த்திரிகை நிருபர்கள் மத்தி ...பில் தன் அகில இந்தியக்கண் ...ேணாட்டத்தைச்சிறிது ஒதுக்கி ...வைத்துவிட்டு, தெக்கணம் ...பொருளாதாரத்துறையில் பின் ...தங்கியிருப்பதன் காரணம் ...என்ன என்று அலசியிருக்கி ...றார். அந்தநேரத்தில் அவர் ...குறிப்பிட்ட கருத்துக்கள் ...காலம் கனிகிறது என்பதை ...தெளிவாகத் தெளிய எடுத்துக் ...காட்டுகின்றன. "தென்னகம் ...பொருளாதாரத்துறையில் பிற் ...போக்காக இருக்கிறதென்பதில் ...கருத்து வேற்றுமை இருப் ...பதற்கில்லை. இந்திய பேரரசின் ...அமைச்சரவையிலும், மற்றைய ...அதிகாரபீடங்களிலும் வடவ ...ரபெரும் அளவிற்கு வீற்றி ...ருப்பது இதற்கு காரணமாக ...இருக்கலாம். தென்னாட்டின் ...பொருளாதாரப் பிற்போக்கு ...நிலையை இந்தியப் பேரரசுஉண ...த்தக்க வகையில் மக்கள் ...வளர்ச்சி செய்யவேண்டியது ...அகத் தேவையானதேயாகும்-"

'வடக்கு வளர்கிறது, தெற்கு ...தேய்கிறது' என்று நாம் கூறு ...கின்றபொழுது அடுக்குமொழி ...பேசுகின்றார்கள் என்று அங்க ...லாய்ப்போரும், குதர்க்கம்பேசி ...நமைக்கேலிசெய்ய முயல்வோ ...ரும், வடக்கு வளரவுமில்லை, ...தெற்கு தேயவுமில்லை என்று ...கூறி சப்பைக் கட்டு கட்டுவோ ...ரும், வடவரான திரு. மகாதேவ ...ஐயங் அவர்களின் பேச்சுக்கு ...என்ன பதில் சொல்வார்களோ! ...தெற்கு தேய்கிறது என்பதை ...எடுத்துக் காட்டியதோடு, ...அதற்குக் காரணம் வடவர் ...ஆதிக்கமே என்பதையும் ஐயங் ...தெரிபற கூறி, இந்நிலை மாறி, ...தெக்கணம் பொருளாதார ...முன்னேற்றம் பெறவேண்டு ...மானால் டில்லியை உணரச் ...செய்கின்றவழியில் போராட்டம் ...ஒன்று மிகமிகத் தேவை என் ...பதையும் வற்புறுத்தியுள்ளார். ...போராட்டம சென்னையோ ...டல்ல, டில்லியோடு என்பதை ...யும் தெளிவாக்கி யுள்ளார். ...இங்கே வாழுகின்ற 'ஏக இந்தி ...யர்கள்' இதை உணர்வார் ...களாக!

...சென்ற திங்கள் 20-ம் நாள் ...மாலை சென்னை கோகலே மண்ட ...பத்தில் நடைபெற்ற தென்னிந் ...திய நல ஆய்வு மன்ற துவக்க ...விழாவில், மன்றத்தை துவக்கி ...வைத்துப் பேசிய டாக்டர். ...சுப்பராயன் அவர்களும் 'சுய ...ராஜ்யா' இதழ ஆசிரியர் திரு. ...காசா சுபபாராவ் அவர்களும் ...பல பல கருத்துக்களை வெளி ...யிட்டுள்ளார்கள். டாக்டர் சுப்ப ...ராயன் அவர்கள் சென்னையில் ...முதலமைச்சராகவும், டில்லியில் ...அமைச்சராகவும், வெளிநாட்டு ...தூதுவராகவும வேறு பல ...உயர்ந்த பதவிகளிலும் பணி ...யாற்றியவர். மொழிக் குழுவில் ...அங்கம் வகித்து இந்திமேல் ...தென்னகம கொண்டுள்ள ...எதிர்ப்புணர்ச்சியை ஓரளவுக்கு ...தெளிவாகவும திடமாகவும் ...எடுத்துக்காட்டிய பெருந்தகை. ...அவர் மன்றத்தை துவக்கி ...வைத்து உரையாற்றும் ...

பொழுது, இயற்கையாகவே இந்தியா, வடநாடு—தென்னாடு என இரண்டு பட்டதாகும்; ஆனாலும், இந்தியா பிளவுபட்டிருந்ததால்தான் அன்னியருக்கு அடிமைப்பட நேர்ந்தது" என்று குறிப்பிட்டார். இயற்கையாகவே இந்திய துணைக் கண்டம் இருநாடுகள் இணைந்த ஒன்று என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். இரண்டு என்பதை ஒப்புக் கொண்ட பிறகு 'ஆனால்' என்று தன் சொற்பொழிவைத் தொடர்ந்த டாக்டர். சுப்பராயன் அவர்கள் 'ஆகவே' என்று உரையைத் தொடவேண்டிய காலம் மிக சேய்மையில் இல்லை. அதே விழாவில் கலந்துகொண்ட திரு. காசா சுப்பாராவ் அவர்களும் வடநாடு தென்னாட்டின் மேல் பெரும் அளவிற்கு ஆதிக்கம் செலுத்துவதையும் கூறி, இந்தியா ஒன்று என்ற எண்ணம் தான் கொண்டிருந்த போதிலும் கூட திராவிட முன்னேற்ற கழகத்தவர் எடுத்துக் காட்டும் வரலாற்றுச் சான்றுகளும் புள்ளிவிவரங்களும் தன் 'ஒன்று' என்ற தத்துவத்தை தகர்த்தெறிந்து விடும்போலிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

அந்த தென்னிந்திய நல ஆய்வு மன்றத்தை வரவேற்று எழுதிய 'கல்கி' இதழ், 29-9-1957ல் 'தென்னாட்டின் குரல்' என்ற துணைத் தலையங்கத்தின் கீழ், "வடநாட்டுக்கும் தென்னாட்டுக்குமுள்ள போட்டா போட்டியில் தென்னாட்டுக் காங்கிரஸ்கட்சிக் காரர்களுக்குச் சுதந்திரம் அவ்வளவாக இல்லை. அகில இந்திய அமைப்பான காங்கிரசில் இவர்களும் ஒரு பகுதியான படியினால் இந்தச் சங்கடம் உண்டு என்று குறித்துள்ளது. வடநாடு தென்னாடு போட்டியையும், தென்னாட்டு காங்கிரசாரின் சுதந்திரம பறிக்கப் படுகிறது என்பதையும், வடவரே ஆதிக்கம்செலுத்துவதையும், அகில இந்திய அமைப்பான காங்கிரசில் இருப்பதனால் அடிமைப்பட்டே இருக்க வேண்டும என்பதையும் தெளிவாக விளக்குகிறது 'கல்கி'.

தென்னிந்திய நல ஆய்வு மன்றம் கட்சிச் சார்பற்றது. கல்கியார்போல தென்னக நலனில் ஆர்வமும் அக்கரையும் கொண்ட அனைவராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. "அதைத் தமிழ் மக்கள் அனைவரும் மனமார வரவேற்க வேண்டும். இந்த ஸ்தாபனத்தைத் திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது வேறுகழகங்களின் துணை ஸ்தாபனம் என்று யாரும் எண்ணலாகாது. இதன வளர்ச்சிக்கு முழு ஆதரவைத் தரவேண்டும்" என்ற கல்கியின் குரலையே நாமும எதிரொலிக்க விரும்புகிறோம்.

மேலே எடுத்துக்காட்டிய குறிப்புகளெல்லாம் காலம் கனிகிறது என்பதை உணர்த்துகின்றன. அதற்கேற்ப நாம் செய்து முடிக்க வேண்டிய கடமைகளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. மக்கள் இதயத்தை நாம் எழுப்பும் உரிமைக் குரல் தட்டிப்பார்க்க ஆரம்பித்து விட்டது. பொதுமக்களும் இப்போது பெரு மகிழ்ச்சியோடு நம் குரலுக்கு செவிமடுக்கின்றனர், கொள்கைக்குத் துணைநிற்கின்றனர் ஏராளமான புள்ளி விவரங்களையும், வரலாற்று மேற்கோள்களையும் பண்பாட்டுச் சிறப்புகளையும் தேடிச் சேர்த்து திரட்டித் தர வேண்டியது நம் பொறுப்பு, கடமை. கடமையைப் பேணுவோம், அதன்மூலம் நாட்டின் உரிமையைக் காப்போம்!

வாழ்க திராவிடம்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கேயே போய் கேளு! இனி இங்கே நிற்காதே! போய்விடு!" என்று தலைவி சினத்தோடு கூறுகிருள்.

காதற்பரத்தை வேறு வழியின்றி தலையைக் கவிழ்த்துக்கொண்டு அவ்விடம் விட்டு அகல்கிருள்.

தலைவியும், காதற் பரத்தையும் உரையாடிக் கொண்டிருந்ததை ஒட்டி நின்று கேட்டுக் கொண்டிருந்த தலைவன், இனித் தன்னைத் தலைவியும் ஏற்றுக்கொள்ள மாட்டாள் காதற்பரத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டாள் என்ற எண்ணத்துடன், சொல்லாமல் கொள்ளாமல் அவன் அவ்விடத்தைவிட்டு நழுவி விடுகிருன்!

இது நற்றிணை 225 ஆம் செய்யுளின் கருத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் குறிஞ்சித் திணையின் பாற்பட்ட 'பரத்தை தலைமகள் கேட்பச் சொல்லியது' என்னும் பிரிவைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் சங்க காலப் பெரும் புலவர்களுள் சிறந்த ஒருவரான கபிலர் ஆவர், அவரால் பாடப்பட்ட வேந்தர்களும், அரசர்களும், வள்ளல்களும் பலராவர். இவரது பாடல்கள் நற்றிணையில் பத்தொன்பதும், குறுந்தொகையில் இருபத்தொன்பதும், ஐங்குறுநூற்றில் நூறும், பதிற்றுப் பத்தில் பத்தும். அகத்தில் பதினறும், புறத்தில் இருபத்தெட்டும் காணப்படுகின்றன.

முருகுறழ் முன்பொடு கடுஞ்சினஞ் செருக்கிப்
பொருத யானை வெண்கோடு கடுப்ப
வாழை ஈன்ற வையேந்து கொழுமுகை
மெல்லியல் மகளிர் ஓதி அன்ன
பூவொடு துயல்வரும் மால்வரை நாடனை
இரந்தோர் உளர்கொல் தோழி திருந்திழைத்
தொய்யில் வனமுலை வரிவனப்பு இழப்பப்
பசந்தெழு பருவரல் தீர
நயந்தோர்க் குதவா நாரின் மார்பே.

[நற்றிணை—225]

[பொழிப்புரை: தோழீ! திருத்தமாகச் செய்த அணிகலன்கள் அணிந்த தொய்யிற் குழம்பால் எழுதப்பட்ட வனமுலையின் கணுள்ள இரேகையினழகு கெடும்படி பசந்து தோன்றிய துன்பம் தீருமாறு, முருகனை ஒத்த வலியோடு கடுஞ்சினம் மிகுத்துப் போர்செய்த யானையின் குருதிபடிந்த வெளிய தந்தம் போல வாழை அப்பொழுது ஈன்ற தாற்றின் கூர்மை பொருந்திய கொழுத்த முகை மெல்லிய சாயலையுடைய மகளிரது கூந்தலை முடித்துப் போட்டாற் போன்ற அதன் பூவோடு அசையும் பெரியமலை நாடனிடம் சென்று விரும்பின எமக்கு உதவாத அன்பற்ற அவனது மார்பை நம்மில் இரந்துகேட்ட வருஎரோ? அவனே வந்து தலையளி செய்து இப்பொழுது கைவிட்டொழிந்தனன் கண்டாய்.

உறழ்-போன்ற; முன்பு-வலிமை; கடுப்ப-போல; வை-கூர்மை; ஓதி-கூந்தல் தொய்யில்-கரும்பு வடிவாக'எழுதும் கோலம்; நார்-அன்பு.]

பற்பல பரத்தையிடமும் அன்புகொண்டு இன்பம் துய்க்கச் செல்லும் தலைமகனைப் பற்றித் தலைமகள் எவ்வாறு கருதுகிருள் என்பதையும், பரத்தையிடம் எவ்வளவு சினங் கொள்ளுகிருள் என்பதையும் புலவர் இச் செய்யுளில் விளக்கிக் காட்டுகிருர்.

பலரிடத்து இன்பந் துய்க்கச் செல்லும் தலைவன் தன்னிடத்தும் வந்ததாகக் காதற்பரத்தை கூறி, குற்றத்திற்குத் தலைவனே பொறுப்பாளியாவானேயல்லாமல் தான் பொறுப்பாளி அல்ல என்பதை நிலைநாட்டுகிருள். தலைவி, தன்னைப் பொறுத்துச் சினங் கொள்ளுவதில் யாதொரு பொருளும் இல்லை என்பதையும் உணர்த்துகிருள்.

தொய்யிற் குழம்பால் உடலில் கோலம் எழுதும் வழக்கம் உணர்த்தப்படுகிறது.

செவ்வாழைத் தாறின் கொழுத்த முகைக்கு யானையின் குருதிபடிந்த தந்தத்தையும், வாழைப் பூவிற்கு மகளிரின் முடித்துப்போடும் கூந்தலையும் உவமைகளாக்கியிருப்பது போற்றுதற்குரியதாகும்.

★ மதிப்புரை ★

ஏன்வேண்டும் இன்பத் திராவிடம்?

[ஆசிரியர்: ''முரசொலி'' மாறன் எம். ஏ.; பக்: 104 விலை: 1-50; கிடைக்குமிடம்: முத்துவேல் பதிப்பகம், 77, மதுரை சாலை, திருச்சி-8]

திராவிடம் ஏன் தனிநாடாக விடுதலை பெற்றுத் திகழவேண்டும் என்பதற்கான காரணகாரிய விளக்கங்களைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் முறையில் ஆசிரியர் மாறன் அவர்கள் ஏற்றுக்கொண்ட அரும்பணியின் சீரிய விளைவுதான் இந்நூல். திராவிடம் பிரிய வேண்டாம் என்பதற்கு மாற்றார்கள் என்னென்ன கருத்துக்களைக் காரணங்களாகக் காட்டினார்களோ, அவற்றையெல்லாம் வினாக்களாக்கி, அவ்வினாக்களுக்கு ஏற்ற விடைகளை யாரும் அசைக்க முடியாதவண்ணம் தெள்ளத்தெளிய ஆசிரியர் விளக்கிக் காட்டுகிறார். திராவிட தேசிய இனம் எப்படிப் பொலிவோடும், வலிவோடும் வளர்ந்து வருகிறது என்பது பற்றியும், உலகில் தனித்தனி நாடுகளாக விளங்கும் பல சின்னஞ்சிறு நாடுகளைக் காட்டிலும் வளமிக்க திராவிடம் எவ்வாறு பலவகைகளிலும்சிறந்து காணப்படுகிறது என்பதுபற்றியும், இந்தியப் பேரரசு திராவிடத்தை எவ்வெவ் வகைகளில் அடிமைப்படுத்தி அடக்கி ஆண்டு ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்பது பற்றியும், தேசியத்திற்கும் சர்வ தேசியத்திற்கும் உள்ள தொடர்புகள் என்ன என்ன என்பது பற்றியும் தெளிவான விளக்கங்கள் தக்க மேற்கோள்களுடன் இதன்கண் காட்டப்பட்டுள்ளன. திராவிடத்தின் விடுதலை விரும்பிகள் நீண்ட நாட்களாக திராவிட விடுதலை பற்றிய விளக்க நூல் வேண்டும் என்று கொண்டிருந்த ஆவலை இந்நூல் ஓரளவுக்கு நிறைவேற்றுகிறது. நூல் வண்ண முகப்புடன் அழகுற அச்சியற்றப் பட்டிருக்கிறது. முத்துவேல் பதிப்பகத்தாரின் முயற்சி பாராட்டுதற்குரியது.

—ம. ஆ.

* * *

திராவிட ஆட்சிமுறை 333

[ஆசிரியர்: இராசை தி. அரங்கசாமி; பக்: 76; விலை: ரூ. 1-00; கிடைக்குமிடம்: திருக்குறள் பதிப்பகம், இராசிபுரம், சேலம் மாவட்டம்.]

திராவிடத்தின் பண்பாட்டினையும், நாகரிகத்தையும், பெருமையையும், புகழையும், சிறப்பையும், செல்வத்தையும், வனப்பையும், வரலாற்றையும் அழகுற விளக்கிக் காட்டி அவற்றிற்கான இலக்கணமாகத் திகழும் முறையில் ஆசிரியர் அரங்கசாமி அவர்கள் இந்நூலைச் செய்யுள் வடிவில் இயற்றி இன்பத் திராவிடத்திற்குத் தந்துள்ளார். வாழ்க்கை மன்றச் சுருக்கம்—ஆட்சி மன்றச் சுருக்கம்—ஆய்வுமன்றச் சுருக்கம் என்று மூன்று பிரிவாகப் பிரிவாக்கப்பட்டு ஒவ்வொரு சுருக்கமும் 111 செய்யுள்களாய் அமையுமாறு 333 செய்யுள்களால் இந்நூல் ஆக்கப் பெற்றுள்ளது. பொருள் நயமும், சொல் நயமும், ஓசை நயமும் இனிய முறையில் பொதிந்து காணப் பெறும் வெண்பாச் செய்யுள்கள் சிறந்து காணப்பெறுகின்றன. தோழர் இராசை சி. அரங்கசாமி அவர்களிடம் கவியியற்றும் தமிழ்ப்புலமை எத்துணைச் சிறந்து விளங்குகிறது என்பதை இந்நூலின் மூலம் அறிந்துகொள்ளலாம். கருத்துக்கள் மக்கள் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்துத் தங்குவதற்கு ஏற்றவாறு இருக்கவேண்டும் என்று கருதித்தான் ஆசிரியர் செய்யுள் வடிவில் இந்நூலைத் தந்துள்ளார். திராவிடத்தார் இந்நூலை நன்கு பயன்படுத்திக் கொள்வார்களாக!

—ம. ஆ.

* * *

அபிசீனிய அடிமை.

[ஆசிரியர்: பி. சி. கணேசன், பி.எஸ்ஸி., பி. டி., பக்: 96; விலை: ரூ. 1-00; கிடைக்குமிடம்; முத்துவேல் பதிப்பகம், 77, மதுரை சாலை, திருச்சி, 8.]

ஆசிரியர் பி. சி. கணேசன் அவர்கள் எழுதிய "அபிசீனிய அடிமை'' "இரு காதலர்கள்'', "தியாக மாளிகை'' ஆகிய மூன்று கதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. முதலில் குறிப்பிடப்பட்டது நீண்ட கதை, மற்று மிரண்டும் சிறு கதைகள். டில்லியில் அரசோச்சிய மகமதிய அரசன் அரசிகள் காலத்தில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டு இந்த மூன்று கதைகளும் எழுதப்பட்டுள்ளன. மூன்று கதைகளிலும் தியாக உணர்வு சித்தரிக்கப்படுகிறது. "அபிசீனிய அடிமை''யில் வரும் பணிப்பெண் பமீயா கடைசிவரை தன் அரசிக்கு உண்மையாக நடந்துகொள்ளச் செய்யும் தியாகங்களும், "இரு காதலர்கள்'' கதையில் வருகிற ஆகா என்ற அடிமைப் பெண் தந்தை புரிந்த வஞ்சகத்தை வெறுத்து காதலன் தரவந்த பட்டத்தரசி பதவியை ஒதுக்கி நேர்மைக்காகப் புரியும் தியாகங்களும், மூன்ருவது கதையில் அமரகவி பக்ரம் சிற்பி யொருவனுக்குப் பதில் தானே மரணதண்டனையை ஏற்று காதலையும் உயிரையும் தியாகம் செய்து தியாக மாளிகை கட்டும் விதமும் படிப்போர் உள்ளத்தை ஈர்ப்பனவாக அமைந்துள்ளன. ஆசிரியரின் தெளிந்த இனிய நடைப்போக்கு கதையின் ஓட்டத்துக்கு நனகு உதவியுள்ளது.

—து. யா.

[மதிப்புரைக்கு அனுப்புவோர் இரண்டு படிகள் அனுப்ப வேண்டுகிறோம்.]

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்கள் யாராவது கூறினால், "சரிதான், இந்திய மக்கள் தொகையில் இந்தி பேசுபவர்கள் தொகை எவ்வளவு?'' என்று கேட்டுப் பாருங்கள். பொதுப்படையாக அல்ல புள்ளிவிவரங்களுடன், இவ்வளவு பேர்கள் இந்தி தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லச் சொன்னால், யாராலும் முடியாது. ஏனென்றால் இந்தி பேசுபவர்கள் தொகை யாருக்கும் தெரியாது!

"எதிர்கட்சிக்காரர்கள் புள்ளி விவரங்களுடன பேசுவதில்லை, நாங்கள் எவ்வளவு புள்ளி விவரங்களுடன் பேசுகிறோம், பாருங்கள்!'' என்று இறுமாப்புடன் பேசுகிற கனம் சுப்பிரமணியத்தை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள்! இவர் தான் மாநிலத்து மந்திரி, இங்குள்ள கணக்கு வழக்கு இவருக்குச் சரியாகத் தெரியாது, அந்த நிலையில் அகில இந்திய புள்ளி விவரங்கள் தெரியாததில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை என நினைத்தால், டில்லி ஆதிக்கத்தில் வீற்றிருக்கும் பெரிய மந்திரிகளையே கேட்டுப்பாருங்கள். ஊருக்கெல்லாம் உண்மைகளைத் தெரிந்து சொல்லுகிற பண்டித நேரு அங்கிருக்கிறார்! கேள்வி கேட்டால் உரத்த குரலில் பேசுகிற கோவிந்த வல்லபந்த் அங்கிருக்கிறார்! திட்டமிடுவதற்காகப் புள்ளி விவரங்களை மூட்டை மூட்டையாகக் கட்டி வைத்துக் கொண்டிருக்கும் குல்சாரிலால்நந்தா என்று ஒரு மந்திரி இருக்கிறார்! கிருஷ்ணமாச்சாரி இருக்கிறார், படீல் இருக்கிறார், மொரார்ஜி இருக்கிறார்;படேபடே மந்திரிகள் இருக்கிறார்கள்! அவர்களையெல்லாம் கேட்டுப்பாருங்கள், "இந்தி பேசுபவர்கள் தொகை எவ்வளவு?'' என்று!

யாருக்கும் தெரியாது!

இந்தியைக் கட்டாயப் படுத்தும் பொழுது "இந்தி பேசுபவர்கள்தான் பெரும்பான்மையினர்'' என்று சொல்கிறார்களே தவிர, இந்தி பேசுபவர்கள் தொகை இவ்வளவு என்று திட்டமாக அவர்களால் கூற முடியாது. இந்தியாவிலேயே யாருக்கும் தெரியாத—தெரிந்துக் கொள்ளாத—தெரிந்தாலும் பேசப்படாத—ஒரு எண்ணிக்கை அது!

ஆச்சரியமாக இருக்கலாம்! இந்திய துணைக்கண்டத்தில் இருக்கும் பல்வேறு மொழியினரையும் பலகோடி மக்களையும் பாதிக்கக்கூடிய ஒரு திட்டத்தைப் போடுகிறார்கள்; இந்தியா முழுவதற்கும் இந்தி அரசாங்க மொழியாக வேண்டும் என்று சட்டத்தைக் காட்டுகிறார்கள், ஆனால் எவ்வளவு பேர்கள் இப்பொழுது இந்தி தெரிந்தவர்கள் என்பது அவர்களுக்கே தெரியாது.

1951-இல் இந்தியாவின் மக்கள் தொகைக்கணக்கு-சென்சஸ்-எடுக்கப்பட்டதில், மற்ற மொழி பேசுபவர்களுக் கெல்லாம் தனித்தனியாகக்கணக்கு தரப்படுகிறது. ஆனால்இந்திக்கு மட்டும் கணக்கு கிடையாது கணக்குத் தரப்படவில்லை

1951 இந்திய மக்கள்தொகை கணக்குபற்றி தரப்பட்ட அறிக்கையில் "இந்தியா முழுமை மக்கள் இந்தியைத் தாய்மொழியாகக்கொண்டவர்களின் எண்ணிக்கையைத் தனியாக தரமுடியாத நிலையிலிருப்பது வருந்தத்தக்கதாகும்'' (Hence the regrettable result that no All India total can be specified for persons who returned the National language–Hindi–as their mother-tongue'') பக்கம் 2 இந்திய சென்சஸ் அறிக்கை 1-மொழி'') என்று தரப்பட்டுள்ளது!

1951மக்கள்தொகையைகணக்கிட்டு, தாய்மொழி பற்றிய விவரங்களைச் சேகரித்து வெளியிடப்பட்ட அறிக்கைகளிலேயே இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களின் எண்ணிக்கை தரப்படவில்லை! சென்சஸ் விவரங்களைத் தொகுத்தவர்களால் தரமுடியவில்லை. இந்திய அரசாங்கத்துக்கும் தெரியாது, யாருக்கும் தெரியாது! ஆதலால் இந்தி பற்றிய பிரச்சனையை விவாதிக்குமுன், "இந்தியாவில் இந்தி பேசியவர்களின் எண்ணிக்கை பற்றி ஒன்றும் தெரியாது'' என்றஉண்மையை தெரிந்துகொள்ளவேண்டும்!

இந்தியாவின் மக்கள் தொகை விவரங்களை வெளியிட்டவர்களே இல்லையென்று கைவிரித்த நிலையில், இந்தியைப் பரப்ப நினைப்பவர்கள் மட்டும் இந்தி பெரும்பான்மையினரால் பேசப்படுவதாகக் கூறிவருகின்றனர். எந்த ஆதாரத்தை வைத்து அவர்கள் அவ்வாறு கூறுகின்றனர்? எந்தப் புள்ளி விவரங்களை வைத்து அவர்கள் அந்த முடிவுக்கு வருகின்றனர்? எதுவுமில்லை. அவர்களுடைய முடிவுக்கு அவர்களேதான் ஆதாரம், அவர்களேதான் புள்ளி விவரங்கள்!

இந்தியைப் பற்றிப் பேசும் பொழுது புள்ளி விவரங்கள் தரப்படுகின்றன. இந்தியை அரசாங்க மொழியாக்குவதுபற்றிஆலோசனை கூறவந்த கெர் குழுவினர்கூட தங்களுடைய அறிக்கையில் இந்தியாவில் பேசப்படும் முக்கியமொழிகளையும் அவற்றைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் எண்ணிக்கைகளையும் தந்திருக்கின்றனர். 1951-இல் எடுக்கப்பட்ட கணக்குப்படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 35 கோடி 69 இலட்சம்! இதில் "இந்தி பேசுவோர்'' என்ற பிரிவின் கீழ் 14 கோடி 99 லட்சம் மக்கள் காட்டப்படுகின்றனர். அதாவது மொத்த மக்கள் தொகையில் 100 க்கு 42 பேர்கள் எனக்காட்டப்படுகிறது.

இந்தி அரசாங்கமொழியாக வேண்டுமென்று காரணம் காட்டுவதற்கும, இந்தி பெரும்பான்மையினரான மக்களால் பேசப்படுகிறது என்று கூறு

அதற்கும் "இந்த 100க்கு 42" என்ற விகிதக் கணக்கு அடிக்கடி எடுத்தாளப்படுகிறது.

படிப்பவர்களுக்குக்கூட, "ஆகா! 100க்கு 42 பேர்கள் இந்தி படிப்பவர்கள் இருக்கிருர்களே; என்ன செய்யலாம்!" என்று தோன்றும்.

ஆனல் ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. "இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் எண்ணிக்கையைத் தனியாகத் தரமுடியவில்லை" என்று சென்சஸ் அதிகாரிகளே சொல்லியிருக்கிருர்கள். இவர்கள் எப்படிச் சொல்கிருர்கள் என்று பார்த்தால், இந்தி மொழிபேசுவோர் தொகை மட்டும் அவர்கள் கணக்கில் சேரவில்லை. இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி ஆகிய நான்குமொழியினரையும் ஒன்ருகச் சேர்த்து இந்தி பேசுவோர் எனக் கணக்குத் தருகிருர்கள்.

100-க்கு 42 பேர்கள் இந்தி பேசுபவர்கள் என்று கூறும்பொழுது, இந்தி பேசுபவர்கள் மட்டுமல்ல இந்தி பேசுபவர்களுடன் உருது பேசுபவர்கள், இந்துஸ்தானி பேசுபவர்கள் பஞ்சாபி பேசுபவர்கள் ஆகியவர்களைச் சேர்த்துக் காட்டுகிருர்கள்.

இந்தியாவில் 1951 கணக்குப்படி மொத்த மக்கள்தொகை 35 கோடி 69 லட்சம். அதில் இந்தி உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி ஆகிய நான்கு மொழிபேசுபவர்கள் சேர்ந்துதான் 14 கோடி 99 லட்சம் (அதாவது 100 க்கு 42 வீதம்) வருகிருர்கள்.

இந்தியாவிலுள்ள முக்கிய மொழிகளைப் பேசுவோர் தொகையும், நூற்றுக்கு எவ்வளவு என்ற விகிதமும் கீழே தரப்பட்டுள்ளன. இது அரசாங்க அறிக்கைகளில் தரப்பட்டதாகும்.

வரிசை எண்.	மொழி	பேசுவோர் எண்ணிக்கை.	100க்கு விகிதம்.
1.	இந்தி		
2.	உருது	14 கோடி 99 இலட்சம்	42
3.	இந்துஸ்தானி		
4.	பஞ்சாபி		
5.	தெலுங்கு	3 கோடி 30 இலட்சம்	9
6.	மராத்தி	2 ,, 70 ,,	8
7.	தமிழ்	2 ,, 65 ,,	7
8.	வங்காளி	2 ,, 51 ,,	7
9.	குஜராத்தி	1 ,, 63 ,,	5
10.	கன்னடம்	1 ,, 45 ,,	4
11.	மலையாளம்	1 ,, 34 ,,	4
12.	ஒரியா	1 ,, 32 ,,	4
13.	அசாமி	— 50 ,,	1
14.	மற்ற மொழிகள்	3 ,, 30 ,,	9
	மொத்தம்	35 கோடி 69 இலட்சம்	100

இந்தக் கணக்குச் சரியானதா? இந்தியை அரசாங்க மொழியாக்குவதற்கு, இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி ஆகிய நான்கு மொழிக்காரர்களின் எண்ணிக்கையையும் சேர்த்துக்கொள்வது முறையாகுமா?

இந்தி, உருது இந்துஸ்தானி பஞ்சாபி இந்த நான்கும் ஒரே மொழிதானு என்றுல் இல்லை. இவைகளையெல்லாம் ஒன்ருக்கி ஒரே மொழியாகக் காட்டுவது சரி என்றுல், திராவிடக்குழு மொழிகள் ஐந்தையும் ஒன்ருக்கி ஒரே மொழியாகக் காட்டிவிடலாம்! ○

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாவிட்டால் இந்தி தெரிந்த ஒருவருக்கு அந்த ஏஜண்டு வேலை தரப்படும். இந்தி தெரிந்திருப்பவர்களுக்கு இந்தி தெரியாதவர்களைவிட அதிகமான சலுகைகள் காட்டப்படும். இந்தி திணிக்கப்பட்டால் இத்தகைய பாரபட்சமான போக்கு வளரும், கேடுகள் சூழும்.

இந்த நிலைமையில் நாம் என்ன செய்யவேண்டும் என்று யோசிக்க வேண்டும். இந்தி திணிப்பை எதிர்த்து, நாம் ஏதாவது உடனடியாகச் செய்தாகவேண்டும். செய்யவும் முடியும். அதைக் குறித்துதான் நான் உங்களிடம் பேசுகிறேன், 1970-ல் ஏதாவது வரப்போகிறதென்றுல்; நீண்ட காலத்துக்குப்புறம் வரப்போகிறது அதைப்பற்றி ஏன கவலைப்படவேண்டும் என்று இப்பொழுது அதைப்பற்றி அலட்சியமாக இருக்க முயல்கிறோம். அதனல்தான் 1965-ல் இந்தி அரசாங்கமொழியாக வேண்டுமென்று 1950-ம் ஆண்டில் தீர்மானம் வந்த பொழுது கவலைப்படாமல் இருந்துவிட்டார்கள். இப்பொழுது 1965-ம் ஆண்டு நெருங்க, நெருங்க, மிகக்குறைந்தகாலம்தான் இடையில் இருப்பதாகத் தெரிகிறது. மறுபடியும் 1965-லிருந்து 1975-க்கோ 1990-க்கோ அந்தக் கெடுநாளை ஒத்திப் போடலாமாவென்று பார்க்கிருேம். அதற்குள் எப்படியும் ஒரு முடிவுக்குத் தானுக எல்லாம் வந்துவிடும் என்று நினைக்கிருர்கள். அவ்வாறு நினைப்பது தவறு, நமது வாழ்நாளில் எப்படியாவது தப்பித்துக்கொண்டால், நமக்குப் பின்னுல் வருபவர்கள் எப்படியாவது பார்த்துக்கொள்கிருர்கள் என்று எண்ணுகிருர்கள். நாம் போடவேண்டிய சண்டையை நமது பிள்ளைகளுக்கும் பேரன்களுக்கும் ஒத்திப்போடுகிருேம். இது எந்த வகையிலும் சரியான மனப்போக்கு அல்ல. அது சரியானதென்றுல், நாம் ஏன நீண்ட காலத் திட்டங்கள் போடவேண்டும்? பெரும் அணைகள் ஏன் கட்ட வேண்டும்? நாடு செழுமையாக வேண்டும் என்பதற்காக; நமக்கு மட்டுமல்ல, நமது எதிர்கால சந்ததியினர்க்கும் நல்ல வாழ்வு கிடைக்கவேண்டும் என்பதற்காக. அங்கெல்லாம் எதிர்காலத்தைப் பற்றி யோசித்துத் திட்டமிடும் பொழுது மொழிப்பிரச்சினையை மட்டும் எதிர்காலத்திற்கு ஒத்திப்போட்டுவிடுவது சரியானதல்ல. ஒத்திப்போட்டாலே, வேலை நடப்பதில்லை. ஒத்திப்போட்ட நாள் வரும்பொழுது முதலிருந்ததைவிட மோசமான குழப்பம் இருப்பது தெரியும். ஆக ஒத்திப்போடுவதால், கஷ்டநஷ்டங்கள் அதிகமாகுமேயன்றி, பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியாது. ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களை மட்டும் நினைத்து நான் அப்படிக் கூறவில்லை. தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையை எதிர்காலத்துக்கு ஒத்திப்போடுவது வருங்காலச் சந்ததிகளுக்கு நாம் பெருத்த அநீதி இழைத்தவர்களாவோம். கெடு நாள் கேட்பது கேடு நாளை ஒத்திப்போடுவதாகும்!

இந்தியை அரசாங்க மொழியாகக் கொண்டு வருவதற்கு அவர்கள் இரண்டு காரணங்கள் தருகிருர்கள். ஒன்று பெரும்பாலான மக்கள் இந்தியைப் பேசுகிருர்கள் என்பது. இரண்டாவது இந்நாட்டு மக்கள் பேசுகிற மொழி ஒன்றைத்தான் அரசாங்க மொழியாக வைக்கவேண்டும் என்பது. பெரும்பாலான மக்கள் என்று கூறும்பொழுது, தென்னிந்தியாவிலுள்ள மக்கள் இந்தியை ஏற்றுக் கொள்கிருர்கள் என்றுல், அது இங்கே இந்தியைக் கொண்டு வருவதற்கு ஒரு காரணமாகக் காட்டப்படலாம். ஆனல் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாயிருக்கிறது. உதாரணமாக இங்கே ஒரு பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதேபோல மற்றொரு பொதுக்கூட்டம் வேறொரு இடத்தில் நடைபெறுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கூட்டத்திலிருப்பவர்களை விடக்கூட அவர்கள் அதிகமானவர்களாக இருக்கலாம். அந்தக் கூட்டத்தில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஒரு முடிவு செய்கிருர்கள் என்றுல், அந்த முடிவை அப்படியே இந்தக் கூட்டத்தில் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப் படுத்துவது நியாயமாகுமா? இந்தியாவில் இந்தி பேசுபவர்கள் எங்கு இருக்கிருர்கள் என்று பார்த்தால் உத்தர பிரதேசத்திலும் மத்திய பிரதேசத்திலும் பெரும்பாலும் இருக்கிருர்கள். அந்த இடத்தில்தான், ஏதோ ஒரு வகையான இந்தியை மக்கள் பேசுகிருர்கள். அந்தப் பகுதிக்கு கிழக்கில் வங்காளத்தில் இந்தி பேசப்படவில்லை."

(அடுத்த இதழில் தொடரும்)

சேலம் தேர்தல் வழக்கு நிதி!

சேலம் தொகுதி தேர்தல் வழக்கை உயர் நீதி மன்றங்கள் வரை சென்று, சிறந்த வழக்கறிஞர்களைக்கொண்டு, சீரிய முறையில் நடத்த வேண்டி, கீழ்க்கண்டவர்கள் பெருந்தன்மையோடு நிதி தந்து உதவியுள்ளனர். அவர்களுக் கெல்லாம் என் மகிழ்ச்சியும் நன்றியும் வணக்கமும் உரியவாக! —இரா. நெடுஞ்செழியன்

25-9-57 புரசை கே. வி. கே. சாமி நினைவுமன்றப் பொதுக் கூட்டத்தில் மன்றத்தின் சார்பாக ரூ. 25-00

28-9-57 திருவைகுண்டம் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ரூ. 13-00.

29-9-57 தூத்துக்குடி தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ரூ. 10-00

1-10-57 குடந்தை தாராசுரம் பொதுக்கூட்டத்தில் ரூ. 3-00.

1-10-57 ஆலங்குடி தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ரூ. 3-00.

14-10-57 நக்கசேலம் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ரூ. 10-18.

சென்னை நண்பர்கள் கழகம் ரூ. 107-00.

திருமணத்தின் நினைவாக: பழைய மாம்பலம் பள்ளி செல்வம் நகர் வேணுகோபால்—சரோஜா 2-00.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:—

இரா. நெடுஞ்செழியன்,
93, பிராட்வே, சென்னை-1

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலைபேசி எண்: